# வானவில்

VAANAVIL
ISSUE – 34 OCTOBER 2013

இதழ் - 34 ஐப்பசி 2013

# தமிழக மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்கும் நடவடிக்கைகளை வட மாகாணசபை எடுக்க வேண்டும்!

இன்று வட பகுதி மக்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாக, எமது கடல் எல்லைகளுக்குள் தமிழக மீனவர்களின் ஊடுருவல் உருவெடுத்துள்ளது. இந்தப் பிரச்சினையைப் பலரும் வரையறுத்துக் கூறுவது போல, ‘வட பகுதி மீனவர்கள் பிரச்சினை’ என்று கூறாமல், வட பகுதி மக்களின் பிரச்சினை என்று நாம் பொதுவாகக் குறிப்பிடுவதற்கு நிறைந்த காரணங்கள் இருக்கின்றன.

இலங்கையின் வட பகுதியைப் பொறுத்தவரை, பாரம்பரியமான தொழில்களாகப் பெரும்பான்மையான மக்களால் விவசாயமும், மீன்பிடித் தொழிலுமே இருந்து வருகின்றன. இந்த இரண்டு தொழில்களுமே கடந்த 30 வருடங்களாக போர் காரணமாக பாதிக்கப்பட்டு வந்தாலும், மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது மீன்பிடித் தொழில்தான்.

குறிப்பாக விவசாயத்தில் பாரம்பரியமாக ஈடுபட்டு வந்தவர்கள் பெரும்பாலும் நிலத்தைச் சொந்தமாக வைத்திருந்த உயர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான். அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் கடந்த காலங்களிலேயே அரச உத்தியோகம், வர்த்தகம் போன்றவற்றின் மூலமும் வருமானம் பெற்று வந்தனர். போர் ஆரம்பமான பின்னர் அவர்களது வாழ்வாதாரங்களில் பாதிப்பு ஏற்பட்ட போது, பலர் பல வழிகளிலும் பணத்தைப் புரட்டி ஏஜென்சிகள் மூலம் வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறி இன்று வசதியுடனும், வனப்புடனும் வாழ்கின்றனர்.

ஆனால் மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பி வாழ்ந்தவர்கள் நிலை அதுவல்ல. சாதாரணமான காலங்களிலேயே அவர்களது வாழ்க்கை உத்தரவாதமானமாகவோ, இலகுவானவானதான ஒன்றாகவோ இருக்கவில்லை. இயற்கையை நம்பியே அவர்களது தொழில் நடந்து வந்தது. போர் ஆரம்பமாவதற்கு முன்னரே கூட, அவர்களது வாழ்வு அரைகுறை வயிற்றுடன்தான் நடந்து வந்தது. போர் ஆரம்பமான பின்னர் அவர்களது வாழ்க்கை தொடர்ச்சியான இடப்பெயர்வுடனும், இழப்புகளுடனும்தான் கழிந்தது. அரசாங்கம் வழங்கிய நிவாரணத்தில்தான் அவர்கள் தமது வயிற்றை அரைகுறையாகக் கழுவிக் கொண்டனர்.




மீனவர்களைப் பொறுத்தவரை அவர்களில் மிகச் சொற்பமானவர்களே யுத்தத்தைக் காரணம் காட்டி வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். அதற்கான காரணங்களில் ஒன்று, அவர்களைப் பொறுத்தவரை இலட்சக்கணக்கில் பணத்தைக் கொடுத்து வெளிநாடுகளுக்குப் போவதற்கு அவர்களிடம் பணம் கிடையாது. இரண்டாவது காரணம், பெரும்பாலும் பாமர மக்களான அவர்கள், தமிழ் மக்களில் கணிசமான ஒரு பிரிவினராக இருக்கும் மத்தியதர வர்க்க மக்களைப் போல், பணத்தையும் வசதி வாய்ப்புகளையும் தேடி ஓடுவதையே நோக்கமாகக் கொண்டவர்கள் அல்ல. தாம் வணங்கும் ‘கடல் தாய்’ எப்படியும் தம்மை வாழ வைப்பாள் என்ற (குருட்டுத்தனமாக இருந்தாலும்) உறுதியுடன் வாழ்ந்தவர்கள்.

இன்று பலர் தமது மண்ணை விட்டு வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டு, அங்கு சகல வசதி வாய்ப்புகளுடனும் வாழ்ந்து கொண்டு ‘தாயக மீட்பு’ப் போராட்டம் நடாத்துவது போல அல்லாது, இந்த மீனவ மக்கள் எவ்வளவோ கஸ்டங்களை

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# வட மாகாண மக்களின் எதிர்காலம்

**செ**ப்டம்பர் மாதம் நடந்து முடிந்த வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஈட்டிய வெற்றி பலராலும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. எனினும் தேர்தலில் தோற்றுப்போன அல்லது எதிபார்த்ததைவிடவும் மோசமானதாக தோற்றுப்போனதாக கருதும் மாற்று தமிழ் தரப்பு அரசியல் சக்திகளிடையே ஒருவித சோர்வை ஏற்படுத்தியுள்ளது. இந்த வெற்றியுடன் குறுந்தேசியவாத அரசியலை தவிர வேறு எதனையும் தமிழ் மக்களிடம் கொண்டு செல்ல முடியாது என்ற எண்ணப்பாடே தமிழ் தேசியக்கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய தமிழ் தரப்பு அரசியல் சக்திகளிடையே எழுந்துள்ளது.

1980களின் பின்னர் ஆயதப்போராட்டம் ஆரம்பிக்கும் வரைக்கும் தமிழ் மிதவாத அரசியல்வாதிகள் மேடைப்பேச்சு, தேர்தல், பாராளுமன்றம் என்ற கொழும்பை மையமாகக் கொண்ட மத்தியத்துவப்படுத்தப்பட்ட அரசியல் வட்டத்தில் ஓடிக்கொண்டிருந்தனர். அதாவது தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் மேடை அமைத்து, தேர்தலில் வெற்றி பெற்றால் தமிழர்களுக்கு உரிமை பெற்று தருவோம் என வீராவேசமாகப் பேசி, தேர்தலில் அதிகப்படியான வாக்குகளைப்பெற்று, பின்னர் பாராளுமன்றம் சென்று எதிர்க்கட்சி வரிசையில் இருந்து கொண்டு, தமிழர்களுக்கு உரிமை ஒன்றும் கிடைக்காத வகையில் வீராவேசமாக, அடுத்த தேர்தல் வரும்வரை பேசுவதே இவர்களது வழக்கமாக இருந்து வந்துள்ளது.

பாராளுமன்றம் செல்வதுதான் இந்த அரசியல்வாதிகளின் நோக்கம், பாராளுமன்றத்தில் பேசி ‘சிங்களவன்’ ஒன்றும் தரமாட்டான் போன்ற காரணங்களை முன்வைத்தே, தமிழ் இளைஞர்கள் இந்த தமிழ் பாராளுமன்ற கட்சிகளையும் தேர்தலையும் நிராகரித்து ஆயதப்போராட்டத்தை ஆரம்பித்தனர். பாராளுமன்ற தேர்தல் காலங்களில் மேடைகளில் பேசப்பட்ட வீராவேசமான பேச்சுகளும், தமிழ் இளைஞர்களை ஆயதப்போராட்டத்திற்கு தள்ளியது என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டேயாகவேண்டும்.

ஆயுதப்போராட்டம் ஐக்கியம், ஜனநாயகம், மாற்றுக்கருத்து என்பதையெல்லாம் அறியாதது, எதிரியும் துரோகியும்தான் நமது பிரதான இலக்கென எல்லாரையும் சுட்டுத்தள்ளி, சகல இன மக்களையும் அச்சத்தில் உறையவைத்து, தமிழ் இளைஞர்களின் ஆயதப்போராட்டத்தினை புலிகள் பாசிசமயப்படுத்தினர். 2009இல் முள்ளிவாய்க்காலில் புலிகள் அழித்தொழிக்கப்பட்ட பின்னர், புலிகள் ஆயுதத்தால் சாதிக்க முடியாமல் போனதை, வடக்கு மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்டுவதன் மூலம் சாதித்துக் காட்டுவோமென இந்த தமிழ் பிற்போக்கு அரசியல்வாதிகள் வீராவேசமாகப் பேசி, அண்மையில் நடந்து முடிந்த வடக்கு மாகாணசபைத் தேர்தலில் பெருவெற்றி ஈட்டியுள்ளனர்.

இம்முறை முதன்முறையாக கொழும்பு மைய அரசியலுக்கு வெளியே, எதிர்க்கட்சி வரிசையில் இல்லாமல் தமிழ் தேசியவாதக் கட்சியொன்று ஆளுங்கட்சியாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. கொழும்பு பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சிகளின் ஏறத்தாள எல்லா பிரேரணைகளையும் எதிர்த்தவர்கள், இப்போது வட மாகாணசபையில் பிரேரணைகளை முன்மொழிபவர்களாக, அதற்கு ஆதரவளிப்பவர்களாக, பின்னர் அவற்றினை அமுல்படுத்துபவர்களாக செயலாற்ற வேண்டும்.

சபையில் பிரேரணைகளை நிறைவேற்றினாலும், அதனை அமுல்படுத்துவதென்பது தமிழ் தேசியக்கூட்டமைப்பில் தற்போது அங்கம் வகிப்பவர்களால் முடியாத காரியம். மேலும் மாகாணசபையினை ஏற்றுக்கொள்ளாதவர்களாக தேர்தலில் போட்டியிட்டு வென்ற கூட்டமைப்பு, வரலாற்றில் எந்தவொரு மிகச்சிறிய மக்கள் நலன் திட்டத்தினையும் அமுல்படுத்தியும் அறியாதவர்கள். எனவே சபையினை ஒரு செல்லாக்காசாக ஆக்குவதிலே தமது தந்திரத்தினை வகுத்து கொள்வார்கள். இது மிகவும் சுலபமான விடயம். நடைமுறைக்கு ஒவ்வாத மற்றும் கொழும்பு மத்திய அரசுடன் மல்லுக்கட்டும் பிரேரணைகளை மாத்திரம் சபையில் நிறைவேற்றினால் வட மாகாணசபையை இலகுவாக முடக்கலாம்.

தேர்தலில் போட்டியிட்டு வெல்லும் கட்சியும் அதன் பிரதிநிதிகளுமே செல்வாக்குமிக்கவர்களாக மாறி, மீண்டும் மீண்டும் தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளவர்களாக இருக்கிறார்கள். தேர்தலில் தோல்வியுற்ற கட்சி, மீண்டும் ஒருமுறை தேர்தலில் தோல்வியுற்றால், மக்களிடம் செல்வாக்கை பெறுவதற்கு பெரும் பிரயத்தனங்கள் செய்ய வெண்டும். இதனால் வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தோல்வியடைந்த தரப்பினர், ஏன் தோல்வியடைந்தோம் என்பதற்கான காரணங்களை சரியாக ஆராய்தல், கட்சியை சீரமைத்தல், தொடர்ச்சியாக மக்களிடம் வேலை செய்து உறுதியான அடித்தளங்களை நிறுவுதல் போன்ற செயற்பாட்டில் உடனடியாக ஈடுபட வேண்டும். இதைவிடுத்து அடுத்த தேர்தல் வரும்வரை மேற்குறித்த எதனையும் செய்யாமல் இருந்துவிட்டு தேர்தலில் போட்டியிட்டால், தமிழ் தேசியவாதமும், அரச – சிங்கள எதிர்ப்பும் நிட்சயம் மீண்டும் வெற்றிவாகை சூடும்.

முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் கைதானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல், மீள்குடியேற்றம், கண்ணிவெடியகற்றல், படைகளை விலக்கல், வீதிகளை மேம்படுத்தல் என்பன இலங்கையில் யுத்தம் மூண்டதற்கான காரணிகளை குணப்படுத்தக்கூடிய நிவாரணிகளல்ல என்பதும் நடந்து முடிந்த தேர்தல் தெளிவாக சொல்லிவிட்டு போயுள்ளது. *

---

**வானவில்**

**தொடர்பு முகவரி:** ‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

# இலங்கையில் தமிழர் வளர்த்த பௌத்தம்!

இலங்கையிலும், தமிழகத்திலும் பௌத்த மத வளர்ச்சிக்குத் தமிழ் பௌத்தர்கள் ஆற்றிய பணியே இன்று இலங்கையில் பௌத்தம் சிறப்புடன் வாழ வகுத்தது எனில் மிகையாகாது. இலங்கையில் பௌத்த மதம் கௌதம புத்தரால் பரப்பப்பட்ட பணி என்றும், பின் தமிழகத்தில் பௌத்த மதம் இலங்கைப் பௌத்தர்களால் பரப்பப்பட்ட பணி என்றும், இது பற்றி ஆராய்ந்த சில இந்திய அறிஞர்களுடைய கருத்து ஆகும். இவர்களுடைய கருத்துக்களை வரலாற்றடிப்படையில் ஆராயும் பொழுது நடந்ததை நடந்தவாறு ஓரளவுக்காவது அணுகக்கூடியதாக இருக்கிறது எனலாம்.



கந்தரோடை புத்தவிகாரைகள்

கௌதம புத்தர் தமது மதத்தைப் பரப்ப மூன்று தடவைகள் இலங்கைக்கு வந்திருந்தார் என்பதனை மகாவமிசம் நூலின் முற்பகுதியில் எடுத்துரைக்கின்றது.

கௌதம புத்தர் முதல் தடவை வந்த பொழுது மகியங்கனையில் வதிந்த இயக்கர் குடிகளையும், இரண்டாவது தடவை வந்த பொழுது நாகதீபத்தில் (யாழ்குடாவில்) வதிந்த நாகர் குடிகளையும் தன் மதம் தழுவச் செய்திருந்தார் என்றும், பின் மூன்றாவது தடவையாகக் கல்யாணியை (களனியா) ஆண்ட நாககுல அரசன் மணியகிகவின் வேண்டுகோட்கிணங்கிப் பௌத்த சங்கத்தினருடன் அங்கு சென்று பௌத்த தருமத்தைப் போதித்துவிட்டு, அங்கிருந்து சமந்தகூடத்தை (சிவனொளிபாதமலை) அடைந்து தனது பாதச் சுவடுகளைத் தெரியும்படி பதித்துவிட்டு ஜேதவனத்திற்குத் திரும்பினார் என்றும் மகாவமிசம் விவரிக்கிறது.


## திருமதி. தனபாக்கியம் குணபாலசிங்கம்

B.A. Hon(Cey), M.A. (Madras)


மகாவமிசத்தின் இந்த வரலாற்றுக் குறிப்புகள், இந்த வரலாற்று நிகழ்ச்சிகள் நிகழ்ந்து எட்டுப் பத்து நூற்றாண்டுகளின் பின் சமயப்பற்றுடன் எழுதப்பட்டவை ஆவன. ஆனாலும் இந்த வரலாற்று நிகழ்ச்சிகளைத் தமிழகத்தில் எழுந்த பழந்தமிழ் பௌத்த காவியமான மணிமேகலையும் விவரிப்பதனால், மகாவமிசத்தின் வரலாற்றுக் குறிப்புகளை ஆதாரபூர்வமற்றவை என்று நாம் நிராகரித்துவிட முடியாது.

தமிழ்ப் பௌத்த காவியமான மணிமேகலை பூம்புகாரிலிருந்து 30 யோசனை தூரத்திலுள்ள மணிபல்லவத்தில் (நயினாதீவில்) இரு நாககுல மன்னர்களிடையே தோன்றிய சச்சரவைத் தீர்த்து வைக்க கௌதம புத்தர் தோன்றி அறத்தைப் போதித்தனர் என்றும், பின் கௌதம புத்தர் சிவனொளிபாதமலையில் பதித்த அடிச்சுவடுகளை,

*ஈங்கிதன் அயலகத்து இரத்தின தீவத்து*
*ஓங்குயர் சமந்தத்து உச்சிமீமிசை*
*ஆறிவயங் கிழவோன் அடியிணையாகிய*
*பிறவியென்னும் பெருங்கடல்*
*மறவி நாவாய் ஆங்குளது*

(மணி.காதை 11 வரி .21-25)

என்றும் குறிப்பிடுகின்றது.

மணிமேகலை குறிப்பிடுகின்ற மணிபல்லவமும், மகாவமிசம் குறிப்பிடுகின்ற நாகதீபமும், இன்றைய நயினாதீவு என அடையாளம் காணப்பட்டுள்ளது. கௌதம புத்தரின் வருகையினால் புனிதமடைந்த நாகநாட்டின் ஒரு பகுதியான நயினாதீவினையே, மணிமேகலா தேவதையின் துணையுடன் தரிசித்தாள் எனத் தெரிகின்றது. எனவே இவ்விரு நூல்கள் தரும் வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து கௌதம புத்தரே இலங்கையில் தனது மதத்தைப் பரப்பினார் என்ற கருத்தினை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

### புத்தரின் தலைமுடியை வைத்துக் கட்டிய விகாரை

அசோகச் சக்கரவர்த்தி தம்பபன்னர்களைப் (இலங்கைத் தீவினரை) பௌத்தம் தழுவ எடுத்த முயற்சி, கௌதம புத்தர் நிர்வாணமடைந்து ஏறக்குறைய 200 ஆண்டுகளின் பின் நிகழ்ந்ததொன்றாகும். எனவே அசோகனின் மகன் மகிந்தர் இலங்கை மக்களை மதமாற்றம் செய்ய வந்திருந்தபொழுது, நாகதீபத்தில் (யாழ்குடாவில்) ஆதிதிராவிடக் குடிகளுடன் காலப்போக்கில் ஒன்றுகலந்துவிட்ட நாகர் குடிகளில் ஒரு பகுதியினராவது பௌத்தர்களாக இருந்தனர் என்றும், அதேபோல் தென்பகுதியில் மகியங்கனையை அண்டிய பகுதியைச் சார்ந்த இயக்கர் குடிகளும் பௌத்த மதத்தைப் பின்பற்றியிருந்தனர் என்றும் நாம் கருத முடிகிறது. (கௌதம புத்தரின் பாதச்சுவடுகள் பதித்த கல்லாசனங்களைக் கொண்ட ஆதி வழிபாட்டுத் தலங்கள் பல யாழ்.குடா முதல் திஸ்ஸமகாராம வரை கிடைக்கப் பெற்றுள்ளமை இதனை உறுதிப்படுத்துகின்றது)

மேலும் இதனை வலியுறுத்தும் வகையில் மகிந்தர் தேவநம்பியதீசனின் ஜம்புகோளத்தில் (நாகதீபத்தின் பழைய துறையில்) பத்துவித சக்திகளை பெற்ற கௌதம புத்தர் நாகர்களை மதம் மாற்றினார் என்பதனை எடுத்துக் கூறுவதையும் நாம் அவதானிக்கலாம்.

தேவநம்பியதீசனும் ஜம்புகோளத்தில் கௌதம புத்தரின் காலடிபட்ட இடங்களைக் கேட்டறிந்து கொண்டு, அந்த இடங்களில் ஜம்புகோள விகாரை, தீசமகா விகாரை, பச்சினாராமா விகாரை முதலானவற்றைக் கட்டுவித்தான்.
இப்பின்னணியிலேதான், நாகதீபத்தில் தேவநம்பியதீசனின் பௌத்த

மதத் திருப்பணிகளுக்கு நாகர்களிடமிருந்து தடைகள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை.

மேலும் சங்கமித்தை போதிமரக் கன்றுகளை இலங்கைக்குக் கொண்டுவந்த பொழுது, நாகர்களே தமதாக்க முனைந்தனர் என்றும் மகாவமிசம் கூறும் (19.3).

மேலும் நாகநாட்டில் பூஜிக்கப்பட்ட பௌத்த சின்னங்களையே இலங்கைத்தீவில் மகாதுபத்தில் துட்டகைமுனுவினால் பிரதிட்டை செய்யப்பட்டது என்றும், இந்தப் பௌத்த சின்னங்களை நாகர்கள் கொடுக்க மறுத்த பொழுது தேரர் ஒருவர் தன் அரிய சக்தியினால் மீட்டுக் கொடுத்தனர் என்றும் தெரிகின்றது.

இவ்வாறு இலங்கைத்தீவிலும், நாகதீபத்திலும் வாழ்ந்த இயக்கர், நாகர் குடிகள் மட்டுமின்றி, இந்தியாவின் பல பாகங்களிலும் வாழ்ந்த இயக்கர், நாகர்களையும் கௌதம புத்தர் மதமாற்றம் செய்தமையையும் மகாவமிசம் ஆங்காங்கே விவரிக்கின்றது.

இலங்கையில் பௌத்த மதம் கௌதம புத்தரால் மட்டுமின்றி, வர்த்தகக் குழுவினராலும் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதற்காகிய கல்வெட்டு ஆதாரங்களும் கிடைத்துள்ளன.

கி.பி ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஆதாரங்களின்படி, வல்லுகன், தபசு எனும் இரு ஒரிசா மாகாணத்து வர்த்தகர்கள் கௌதம புத்தரை நேரில் சந்தித்துப் பெற்ற தலைமுடியினை இலங்கைக்குக் கொண்டுவந்து திரிகோணமலைப் பகுதியை அண்டிய திரியாயி எனும் இடத்தில் கட்டிய கிரிகந்த சேதியத்தில் வைத்துக் கட்டினார்கள் எனத் தெரிகின்றது.

## தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்த குகைகள்

திரிகோணமலையிலமைந்த இலங்காபுரி நகரிலிருந்து இயக்கர் குடிகளை ஆண்ட குபேரன், இராவணன் முதலான இயக்கர் குலத் தலைவர்கள் காலம் முதலாகத் திரிகோணமலை திரிகூடமென்றும், கோகர்ண என்றும் இதிகாச புராணங்களில் போற்றப்பட்டு வந்துள்ளது.

மகாவமிசமும் கோகர்ணத்துறை என இதனைக் கிழக்கிந்திய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புடைய துறையாகவே எடுத்துரைக்கின்றது. இத்துறைமுகத்தையண்டி வளர்ந்த பிறநாட்டு வர்த்தகத்தை மையமாகக் கொண்டு பல இன மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதற்கு தபசு, வல்லுகன் எனும் வர்த்தகக் குழுக்களின் வரலாறு ஆதாரமாக அமைகின்றது.

எனவே கிழக்கிந்திய வர்த்தகத் துறைகளுடன் கோகர்ணத்துறை வைத்திருந்த வர்த்தகத் தொடர்புகளினால் பௌத்த மத பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த வர்த்தகர்களின் வருகை புத்தர் காலத்திலிருந்தே ஆரம்பமாகியிருந்தது என்பது தெளிவாகின்றது.

இந்தப் பின்னணியைக் கொண்டே பாண்டு வாசுதேவனும், புத்தகசனாவும் பௌத்த தேரர்கள் வேடத்தில் கி.மு. 444ஆம் ஆண்டளவில் கோகர்ணத்துறையில் வந்திறங்கினர் எனலாம்.

நாகதீபத்திலும் (யாழ்.குடாவிலும்) இலங்கைத்தீவிலும் பெருங்கற் பண்பாட்டினைப் பேணிய ஆதிதிராவிடக் குடிகளும், தாம் வதிந்த கரையோரப் பட்டினங்களில் இந்துக்களாக வாழ்ந்தனர் என்பதற்குரிய ஆதாரங்களை நாம் காட்டினாலும், பௌத்தம் செல்வாக்குற்ற பகுதிகளில் நாகர் குடிகளைப் போன்று இவர்களும் பௌத்தம் தழுவியிருந்தனர் என்று நாம் கொள்ளின் தவறாகாது. கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பழைய பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழ் வணிகர்களால் வழங்கப்பட்ட குகைகள் பற்றிக் குறிப்பிடுகின்றன.

நாவல் நீராவி மலைக் (வட மாகாணத்தில் விளாங்குளத்திலிருந்து எட்டு மைல் தொலைவில் உள்ளது) கல்வெட்டுகள், வேலன், கோடி முதலான ஈறுகளைக் கொண்ட பெயர்களையுடையனவாகவும், மீன், திரிசூலம், ஓம், சிவஸ்திகா, வட்டம் முதலான குறிகளைக் கொண்டவையாகவும் இருத்தலால், இவை பாண்டிநாட்டுக் கலாச்சாரத்தைப் பேணிய தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்த குகைகள் எனக் கொள்வதில் பிழையாகாது.

மேலும் குருந்தனூர் மலைப்பகுதியை அண்டியிருக்கும் பகுதிகளில் ஏராளமான பௌத்த அழிபாடுகள் காணப்படுவதால் புத்தர் இரண்டாவது தடவையாக இலங்கையில் தரிசித்த இடம் இதுவாக இருக்கலாம் என்று பாக்கர் கருதுவதற்குத் தூண்டுகோலாக இருந்த காரணிகள், இதன் பழமையைப் புத்தர் காலத்திற்கே தள்ளி விடுகின்றன. எனவே ஆதியில் இப்பகுதிகளில் ஆதி நாகர் குடிகளும், ஆதி திராவிடக் குடிகளுமே இந்த பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்கு முன்னோடிகள் ஆவர். காலப்போக்கில் பௌத்த வழிபாட்டுச் சின்னங்கள் நிறைந்த இப்பகுதிகளைச் சிங்களப் பௌத்தர்களும் ஆதரிக்க முற்பட்டிருக்கலாம் என்பதில் ஐயமில்லை.

## ஆதிதிராவிடக் குடிகள் பௌத்தம் தழுவிய நிகழ்ச்சி

இவ்வாறு நாகதீபத்திலும், இலங்கையிலும் ஆதி நாகர் குடிகள், ஆதி திராவிடக் குடிகள், ஆதி இயக்கர் குடிகள், ஆதிக் கிழக்கிந்திய வர்த்தகக் குடிகள் முதலானோர் கி.மு. 5ஆம் நூற்றாண்டளவிலே பௌத்த மதத்தின் தோற்றத்தைக் கேள்வியுற்றும், புத்தரை நேரில் தரிசித்துத் தழுவியும், சேதியங்கள் அமைத்தும், புத்த சின்னங்களைத் தாபித்தும் பௌத்த மதத்தை நிலைநிறுத்தியிருந்தார்கள்.

ஆனால் விஜயனின் வழித்தோன்றல்களான ஆதி சிங்களக் குடிகள் தேவநம்பியதீசன் (கி.மு. 247–207) ஆட்சிக்காலம் வரை பௌத்த மதத்தைத் தழுவியிருக்கவில்லை. தம்பபன்னியில் வாழ்ந்த இச்சிங்களக் குடியேற்றத்தினரை மதமாற்றம் செய்யும் பணியைத் தேவநம்பிதீசன் வேண்டுகோட்கிணங்கியே அசோகச் சக்கரவர்த்தி ஈடுபட்டிருந்தார்.

அசோகர் கல்வெட்டுகள் தம்பபன்னர் என்று குறிப்பிடும் பொழுது தம்பபன்னியிற் பெரும்பான்மையினராக வாழ்ந்த பாண்டி நாட்டிலிருந்து குடியேறிய ஆதி திராவிடக் குடிகள், மற்றும் சிங்கபுரத்திலிருந்து குடியேறிய சிறுபான்மையினரான ஆதி சிங்களக் குடிகளையே குறிப்பிடுகின்றார். (விஜயனின் தந்தை கிழக்கிந்தியாவிலமைந்த சிங்கபுரம் பற்றிய விபரங்களுக்குப் பார்க்கவும் எமது, வங்க இளவரசர் விஜயன் வரலாறும், இலங்கையில் சிங்கள இன மொழி, எழுத்துத் தோற்ற வளர்ச்சிகளும் – 1989 – பக்கம் – 24)

மேலும் மகாவமிசம் குறிப்பிடுகின்ற விஜயன் காலத்துப் பாண்டிநாட்டுக் குடியேற்றங்கள், மதுரையில் தமிழ்சங்கம் அமைத்த ஆதி திராவிடக் குடிகளின் வழிவந்தவரே.

ஆனால் மகாவமிசத்திற்கு முந்தைய நூல்களான இராமாயணம், மகாபாரதம், அர்த்த சாஸ்திரம், இரகுவமிசம் முதலானவை காபடபுரத்தில் (கொற்கையில்) தமிழ்ச்சங்கம் அமைத்த ஆதி திராவிடர்களைக் குறிப்பிடுகின்றன. இவற்றுள் காளிதாசனின் இரகுவமிசம் கபாடபுரத்தை (கொற்கையை) உரகபுரம் என்று

கூறுவதிலிருந்து நாகர்கள் இக்காலத்திலே ஆதி திராவிடக் குடிகளுடன் ஒன்று கலந்துவிட்டனர் என்பதும் உறுதிப்படுத்தப்படுகின்றது. எனினும் அசோகர் கல்வெட்டுக்கள் ஆதி திராவிடர்களைச் சேரர், சோழர், பாண்டியர் என்றே குறிப்பிடப்படுகின்றன..

மகாவமிசம் தருகின்ற விபரங்களின்படி, இலங்கையின் தென்பகுதியையடைந்த விஜயன் இயக்கப் பெண்ணாகிய குவேனியுடன் சிறிஸ்தவத்து நகரையண்டிய பகுதிகளில் வாழ்ந்து இரு குழந்தைக்குத் தந்தையாகிய பின்னரே, ஒரு அரசினை உருவாக்கத் தலைப்பட்டான் எனத் தெரிகிறது. எனவே ஒரு அமைதிமிக்கப் பண்பாடுடைய அரசினை உருவாக்கும் மனநிலையுடன் ஆதி திராவிடக் குடிகள் வாழ்ந்த தம்பபன்னிக்கே செல்கிறான். அங்கு வாழ்ந்த ஆதி திராவிடக் குடிகள் விரும்பும் வகையில் பாண்டி நாட்டிலிருந்து பாண்டிய இளவரசியையும், தோழிகளையும் மற்றும் ஆயிரம் பாண்டிநாட்டுத் திராவிடக் குடும்பங்களையும் தருவித்துத் தம்பபன்ன அரசை உருவாக்கிக் கொள்கிறான். இந்த அரசு பாண்டிய அரசின் தமைமைத்துவத்தை மதித்து வருடந்தோறும் விலைமதிப்பற்ற முத்துக்களையும் பரிசாக அனுப்பி வந்துள்ளது.

மகாவமிசத்தின் இத்தகவலில் இருந்து தம்பபன்னி அரசின் ஆட்சியின் கீழ்ப் பெரும்பான்மையிராகத் திராவிடக் குடிகள் இருந்தனர் என்பது நிறுவப்பட்ட உண்மையாகும். எனினும் விஜயனின் ஆட்சிக்குப்பின் திராவிடக் கலப்பற்ற அரசாட்சியை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதன் விளைவாகவே சிங்கப்புரத்திலிருந்து பாண்டுவாசுதேவனும், புத்தகசனாவும் மாறுவேடத்தில் கோகர்ணத்துறைக்கு (திரிகோணமலைத் துறைக்கு) வருவிக்கப்பட்டனர். தம்பபன்னவில் வாழ்ந்த திராவிடக் குடிகள் அறியாத வகையில் தனிச் சிங்கள அரசை ஏற்படுத்த எடுத்த முயற்சி இது எனலாம்.

ஆனாலும் தம்பபன்ன மக்கள் ஏற்கெனவே கலப்பு மணத்தால் புதியதொரு இனத்தினை ஏற்படுத்தியிருந்தனர் என்பதனை நாம் மறுக்க முடியாது. இந்த மக்களையே அசோகன் கல்வெட்டுகள் தம்பபன்னர்கள் எனக் குறிப்பிடுகின்றனர். எனவே மகாவமிசம் இந்த மக்கள் பௌத்தம் தழுவிய வரலாற்றினையே எடுத்துரைக்கின்றது எனில் பிழையாகாது.

எனினும் இந்த நிகழ்ச்சி நிகழ்ந்து பல நூற்றாண்டுகளின் பின்னர் இதனை எடுத்துரைக்கின்ற மகாவமிச ஆசிரியர், முழுக்க முழுக்க ஒரு சிங்கள பௌத்தராகத் தாம் இருப்பதாகக் கருதிக்கொண்டே தம்பபன்னவில் வாழ்ந்த ஆதி திராவிடக் குடிகளின் முக்கிய பங்கினை மறைத்துவிடுகின்றார். ஆனால் தீபவமிசத்தில் பௌத்த மத வருகை பற்றிக் குறிப்பிடுகையில்,

*தம்பபன்னிக்குப் போவோமாக, தம்பபன்னி மக்கள் ஆற்றலுடையவர்கள். எல்லாத் துன்பங்களையும் அழித்துவிடக்கூடிய நல்ல மார்க்கத்தைத் தம்பபன்னி மக்கள் கேட்கவில்லை. அவர்களை நாம் திருப்திப்படுத்துவோம். இலங்கைத் தீவிற்குச் செல்வோமாக.*

(அதி.12 - பக.34)

என இனவாரியாக எதுவும் குறிப்பிடப்படாமையை நாம் இங்கு அவதானிக்கலாம். எனவே தம்பபன்னவில் ஆதிச் சிங்களக் குடிகளுடன் கலப்புற்ற ஆதி திராவிடக் குடிகளும், இச்சந்தர்ப்பத்தில் பௌத்தம் தழுவிவிடுகின்றனர் என்பது தெளிவாகின்றது.

இவ்வாறு நாகதீபத்திலும், இலங்கைத் தீவிலும் ஆதி திராவிடக் குடிகள் பௌத்தம் தழுவிய நிகழ்ச்சி காலத்தால் முந்தியதொன்றாகும். ஆனால் தமிழகத்தில் வாழ்ந்த ஆதி திராவிடக் குடிகளான சேரர், சோழர், பாண்டியர், அசோகர் காலத்திலும் பௌத்தம் தழுவக்கூடிய சூழ்நிலைகள் அங்கு இருக்கவில்லை. எனவே அசோகர் சேர, சோழ, பாண்டிய நாட்டு மக்களைத் தனது நேச நாட்டினராகக் கொண்டிருந்தாலும், அவர்கள் வரவேற்காத பௌத்தத்தை அவர்கள் மீது திணித்துவிட முயலவில்லை. அதனால் அசோகனின் பௌத்த மதக் குழுவினர் இந்தியாவில் தெற்கே மைசூர் வரையுமே வந்திருந்தனர். அதனாலே மைசூரில் பிரம்மகிரி, ஜதிக்காராமேஸ்வர, சித்தாபூர் முதலான இடங்களில் கிடைக்கப்பெற்ற அசோகனின் கல்வெட்டுகள் போன்று எதுவுமே தமிழகத்தில் கிடைக்காமல் போயின. அதாவது அசோகன் தமிழகத்திற்கு பௌத்த மதக் குழுவினரை அனுப்பினான் என்பதற்காகிய சான்றுகள் எதுவுமே கிடைக்கவில்லை எனலாம்...

இலங்கைத் தீவிலும், நாகதீபத்திலும் (யாழ்குடாவிலும்) ஆதிப் பௌத்த மத வரலாற்றில் பௌத்த மத வளர்ச்சிக்காக ஆதி நாகர் குடிகளும், ஆதி திராவிடக் குடிகளும், ஆற்றிய தொண்டினை மட்டிட்டுக்கூற மகாநாமன் முதலான பழைய சிங்கள பௌத்தர்களோ, அன்றேல் இன்றைய சிங்கள பௌத்த ஆசிரியர்களோ இதுவரை சகிப்புத்தன்மையுடன் முன்வரவில்லையெனலாம். எனவே இதற்கு மாறாக, அன்றுமுதல் இன்றுவரை குறுகிய கோட்பாடுகளே சிங்களப் பௌத்தர்கள் மத்தியில் நிலவுகின்றன. அதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏதாவது ஒரு பௌத்த வழிபாட்டுத்தலத்தின் அழிபாடுகளைக் காணநேரிட்டால், அவை தம் மூதாதையருடையதெனச் சிங்கள பௌத்தர்கள் உரிமை கோருவதனால், பதினெட்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தம் மூதாதையர் பௌத்த மத வழிபாட்டைப் பேணியிருந்தார்கள் என்பதனை அறியாத தமிழ் மக்களும், இவை தம் கலாச்சாரத்திற்குரியனவல்ல என்ற கருத்துடையவர்களாக இவற்றை அழித்துவிட வேண்டும் என்கிற உணர்வலைகளைக் கொள்கின்றனர்...

## எல்லாளனும் துட்டகைமுனுவும்

சோழ இளவரசனாகிய எல்லாளன் (கி.பி. 145 - 101) பௌத்த மக்களால் பெரிதும் விரும்பப்பட்டவன் ஆவான். அவனது நாற்பத்தி நான்கு வருட ஆட்சியில் நண்பர்கள், எதிரிகள் என்ற வேறுபாடின்றி நீதியின் முன் எல்லோரையும் சமமாக நடத்தினான் என்று மகாவமிசம் இவனது ஆட்சியைப் புகழ்ந்து கூறுவதுபோல வேறு எந்தச் சிங்கள மன்னனையும் கூறவில்லை. இவனது நீதியான ஆட்சியை நிரூபிப்பதற்குப் பசு, பறவை, முதியவள் முதலானோர் எல்லாளனின் படுக்கையறை மணியையடித்து நீதி கோரிய வரலாறுகளை எடுத்துரைக்கின்ற மகாவமிசம், இவனது பௌத்த மத ஈடுபாடுகளையும் எடுத்துக்கூறத் தவறவில்லை.

இவன் ஒருமுறை பௌத்த சங்கத்தினரை உணவிற்கு அழைப்பதற்காகச் சேதியபர்வதத்திற்கு (மிகிந்தலைக்கு) இரதத்திற் சென்றான் என்றும், அப்போது இரதத்தின் நுகத்தடி ஒரு பௌத்த தூபத்தின் மீது மோதித் தூபத்தின் கட்டிடம் சிதைவுற்றதால், அதனையறிந்த மன்னன் இரதத்திலிருந்து இறங்கித் தரையில் படுத்துக்கொண்டு தேரின் சக்கரத்தால் தன் தலையைக் கொய்துவிடும்படி கோரினான் என்றும், அதனை மந்திரி விரும்பாததனால் இடிந்துபோன பதினைந்து கற்களைக் கட்ட

தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...

# 20ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த போர்த்தந்திரிகளில் ஒருவரான ஜெனரல் கியாப் 103ஆவது வயதில் காலமானார்!



ஜெனரல் கியாப்

வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியினதும், அரசினதும் தலைவர்களில் ஒருவரும், 20ஆம் நூற்றாண்டின் மிகச்சிறந்த போர்த்தந்திரிகளில் ஒருவருமான ஜெனரல் வோ நிகுயென் கியாப் (Vo Nguyen Giap) தனது 103ஆவது வயதில் தலைநகர் ஹனோயில் (Hanoi) உள்ள மக்கள் விடுதலை இராணுவத்தின் வைத்தியசாலையொன்றில் காலமானார்.

அவரது பூதவுடல் பல்லாயிரக்கணக்கான வியட்நாம் மக்கள் மற்றும் கட்சி - அரச தலைவர்களின் புரட்சிகர அஞ்சலிக்குப் பிறகு பூரண அரச மரியாதையுடன் மத்திய வியட்நாமிலுள்ள அவரது சொந்த மாகாணமான குவாங் பின்னில் (Quang Binh) 2013 ஒக்ரோபர் 12ஆம் திகதி அடக்கம் செய்யப்பட்டது.

உலக வரலாற்றில் இரண்டு பெரும் ஆக்கிரமிப்பு வல்லரசுகளைத் தோற்கடித்து வியட்நாம் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வெற்றிக்கு இட்டுச் செல்வதில் தலைவர் ஹோசிமின் (Ho Chi Minh) அவர்களுடன் தோளோடு தோள் நின்று போராடிய பெருமை கியாப் அவர்களுக்கு உண்டு. இன்னும் சொல்லப்போனால் அந்தப் போராட்டங்களுக்கான போர் வியூகங்களை முன்னின்று வகுத்தவர் கியாப் எனலாம்.

முதலில் வியட்நாமை ஆக்கிரமித்திருந்த பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்கும் வீரமிக்க போராட்டத்தை வியட்நாம் மக்கள் பல ஆண்டுகாலம் நடாத்தினார்கள். அப்பொழுது வியட்நாமின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்காக 'வியெட்மின்' (Viet Minh) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் தளபதியாக முதன்முதலாக கியாப் நியமிக்கப்பட்டார். வியட்நாமின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் 'டியன் பியன் பூ சம்பவம்' (Dien Bien Phu Incident) பெரும் வரலாற்று முக்கியத்துவமுடையது. 1954இல் வியட்நாமின் மிகவும் பின்தங்கிய கிராமப்புறமான லாவோஸ் நாட்டின் எல்லைக்கு அருகில் இருந்த டியன் பியன் பூ பள்ளத்தாக்கில் 2,50,000 பிரெஞ்சுப் படைகள் பெரும் முகாமொன்றை அமைத்திருந்தனர்.

இந்த முகாமை அழித்தொழிக்கும் பொருட்டு வியட்நாமிய கெரில்லாப் படைகள் கியாப் தலைமையில் சுற்றி வளைத்தனர். இந்த முற்றுகை சுமார் இரண்டு மாதங்கள் வரை நீடித்தது. இந்தப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான வியட்நாம் மக்களையும் கியாப் ஈடுபடுத்தினார். பலநூறு மைல் தூரத்துக்கு சுரங்கப்பாதை அமைக்கப்பட்டது. அந்தச் சுரங்கப்பாதை ஊடாக வியட்நாம் மக்கள் இரவு பகல் என்று பாராது போராளிகளுக்கு உணவும், மருந்தும், ஆயுதங்களும் எடுத்துச் சென்று வழங்கினர். பிரெஞ்சு ஆக்கிரமிப்புப் படைகள் நவீன ஆயுதங்கள், பீரங்கிகள், டாங்கிகள், விமானங்கள் கொண்டு போராளிகள் மீது கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

ஆனால் கியாப் வழிநடாத்திய போராளிகள் கொஞ்சம்கூட சளைக்கவில்லை. பல்வேறு இழப்புகளுக்கு மத்தியிலும் வியட்நாமின் மக்கள் படை உறுதியுடன் நின்று போராடியது. இறுதியாக இரண்டு மாத கால முற்றுகையின் பின்னர் பிரெஞ்சு ஆக்கிரமிப்புப் படைகள் தங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டு வியட்நாம் விடுதலைப்படைகளிடம் சரணாகதி அடைந்தனர். அதன் பின்னரே கியாப்பின் புகழ் உலகெங்கும் பரவியது.

பிரெஞ்சு சரணாகதி அடைந்த பின்னர் 1954இல் ஜெனிவாவில் நடைபெற்ற வியட்நாம் சம்பந்தமான சர்வதேச மாநாட்டின் முடிவாக ஏகாதிபத்திய சக்திகள் வியட்நாமை வடக்கு - தெற்கு என இரு பகுதிகளாகத் துண்டு போட்டனர். (இதேமாதிரித்தான் 1950 - 51 யுத்தத்தின் பின்னர் கொரியாவையும் வடக்கு - தெற்கு கொரியாக்கள் என ஏகாதிபத்தியவாதிகள் துண்டு போட்டதுடன், வடக்கில் உள்ள சோசலிச அரசைக் கவிழ்க்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். நமது நாட்டிலும் ஏகாதிபத்திய சக்திகள்

பாசிசவாதப் புலிகளைப் பயன்படுத்தி நாட்டைத் துண்டாட முயன்ற போதிலும், அதிஸ்டவசமாக அது தோற்கடிக்கப்பட்டுவிட்டது)

வடக்கில் தலைவர் ஹோசிமின் தலைமையில் முதலில் ஜனநாயகக் குடியரசும், பின்னர் சோசலிசக் குடியரசும் நிறுவப்பட, தென் வியட்நாமில் டியம் என்பவனின் தலைமையில் ஏகாதிபத்திய சார்பான பொம்மை ஆட்சி ஒன்று உருவாக்கப்பட்டது. பிரெஞ்சு காலனித்துவவாதிகள் வெளியேறியதைத் தொடர்ந்து, அமெரிக்கா தென் வியட்நாமில் தனது படை பட்டாளங்களைக் குவித்து அதை ஆக்கிரமித்ததுடன், வட வியட்நாமின் மீதும் அடிக்கடி விமானக் குண்டுவீச்சுகளை நடாத்தி வந்தது.

1965இல் 'டொங்கின் வளைகுடா சம்பவம்' என்ற பெயரில் ஆரம்பமான அமெரிக்காவின் நேரடித் தலையீடு, அப்பட்டமான ஆக்கிரமிப்பாக மாறி, 10 வருட கடுமையான யுத்தத்தின் பின் 1975இல் அமெரிக்கா வியட்நாம் மக்களால் முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து முடிவுக்கு வந்தது. இந்தப் போராட்டத்துக்கு வட வியட்நாம் பின்தளமாக செயற்பட்ட அதேவேளையில், சீனா, சோவியத் யூனியன் உட்பட அனைத்து சோசலிச நாடுகளும், உலக மக்களும் பலமான ஆதரவு அளித்தன.

அதேவேளையில், களத்தில் (தென் வியட்நாமில்) இந்தப் போராட்டத்தை தென் வியட்நாம் தேசிய விடுதலை முன்னணி தலைமைதாங்க, அதன் இராணுவப் பிரிவான 'வியட்கொங்'கும் (Viet Cong), அதன் தளபதியான பாட் (Bhat) அவர்களும் முன்னெடுத்துச் சென்றனர். இந்தப் போராட்டத்தில் ஜெனரல் கியாப் அவர்கள் வழங்கிய போர்த்தந்திர ஆலோசனைகள்தான் இறுதி வெற்றியை உத்தரவாதம் செய்தது என்றால் அது மிகையாகாது.

தென் வியட்நாம் மக்களின் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம், வியட்நாம் எல்லைகளுக்குள் மட்டும் நடைபெற்ற ஒன்றல்ல. அமெரிக்கா லாவோசிலும் தனது படைத்தளங்களை நிறுவியதால், அங்கும் 'பதட்லாவோ' (Pathetlao) என்ற விடுதலை அமைப்பின் கீழ் அந்நாட்டு மக்கள் திரண்டெழுந்து அமெரிக்காவுக்கு எதிராகப் போராடினர். இந்த நிலைமையில் கம்போடியாவில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த இளவரசர் நொரோடம் சிஹானூக் வியட்நாமிய மக்களின் அமெரிக்க எதிர்ப்புப் போராட்டத்தை ஆதரிக்கிறார் என்று காரணம் காட்டி அங்கு இராணுவச் சதியை அரங்கேற்றி, லொன்நொல் என்ற தனது விசுவாசியான கம்போடிய இராணுவ ஜெனரல் ஒருவரை அமெரிக்கா ஆட்சியில் இருத்தியது.

இந்த நிலைமைகளால் வியட்நாம் மக்களின் அமெரிக்க எதிர்ப்புப் போராட்டமாக இருந்த விடுதலைப் போராட்டம், முழு இந்தோ – சீனாவினதும் (வியட்நாம், லாவோஸ், கம்போடியா) போராட்டமாக பரிணமித்தது. இந்தப் போராட்டத்தின் போது அமெரிக்கா பல இலட்சம் இராசாயன குண்டுகளை இந்த நாடுகளில் வீசியதுடன், சுமார் 30 இலட்சம் மக்களையும் கொன்று குவித்ததாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. (இதே அமெரிக்காதான் பின்னர் ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா போன்ற நாடுகளிலும் அத்தகைய அழிவுகளைச் செய்து கொண்டு தனக்குப் பிடிக்காத நாடுகளின் மனித உரிமை பற்றி வாய்கிழியப் பேசுகிறது)

இந்தப் போராட்டத்தின் நாயகரான ஜெனரல் கியாப் எப்படி தலைவர் ஹோசிமின் (வியட்நாமில் சிறுவர் முதல் பெரியோர் வரை ஹோசிமின் அவர்களை 'அங்கிள் ஹோ' என்றே வாஞ்சையுடன் அழைப்பது வழமை) வியட்நாமிய மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து வாழ்ந்தாரோ, அதேபோல கியாப் அவர்களும் வாழ்ந்தார். அதேவேளையில், கியாப் அவர்கள் வகித்த முக்கியத்துவம் மிக்க பாத்திரம் காரணமாக, அவர் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின் அரசியல் குழு அங்கத்தவர், பாதுகாப்பு அமைச்சர், மக்கள் விடுதலை இராணுவத்தின் தளபதி, பிரதிப் பிரதமர், தேசியப் பேரவை உறுப்பினர் போன்ற உயர் பதவிகளை பதவிகளையும் வகித்தார்.

அவருக்கு நாட்டின் பல உயரிய விருதுகளுடன், பல சர்வதேச விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன. அவரது மக்கள் யுத்தக் கோட்பாடுகளும், போர்த்தந்திர முறைகளும் வியட்நாமில் மட்டுமின்றி, பல மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகளிலும்கூட பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டமாக வைக்கப்பட்டுள்ளன.

1972இல் கியாப் ஒரு கட்டுரையில் குறிப்பிடுகையில், "அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு அளவுக்கு அதிகமான ஆயுதங்களும், வெடிமருந்துகளும் வழங்கப்பட்டிருந்தாலும், இந்த மண்ணில் ஏனைய படையெடுப்பாளர்களுக்கு ஏற்பட்ட வீழ்ச்சியைப் போன்றதிலிருந்து அவர்களும் தப்பிவிட முடியாது" என உறுதியுடனும், தீர்க்கதரிசனத்துடனும் குறிப்பிட்டுள்ளார். (இதை அவர் குறிப்பிட்டு 3 வருடங்களில் அமெரிக்கா அவமானகரமான தோல்வியுடன் வியட்நாமை விட்டு வெளியேறியது)

ஜெனரல் கியாப் அவர்களின் வாழ்வு என்பது மலர் பாதையில் நடந்து வந்த ஒன்றல்ல. அது கல்லும் முள்ளும் நிறைந்த பாதை. மலைகளையும், ஆறுகளையும், சமுத்திரங்களையும், பெரும் வனாந்திரங்களையும், புயல்களையும் கடந்து வந்த பாதை. 103 வருடங்கள் வியட்நாம் மக்களுடனும், மண்ணுடனும் பின்னிப் பிணைந்த வாழ்க்கை அவரது வாழ்க்கை.

கியாப் அவர்கள் 1911 ஒகஸ்ட் 25இல் மத்திய வியட்நாமில், லாவோஸ் நாட்டு எல்லையை ஒட்டிய, பென் கெய் (Ben Hai) ஆற்றுக்கு வடக்கேயுள்ள குவாங் பின் மாகாணத்தில் பிறந்தார்.

குடும்பத்தில் மூத்தவரான கியாப், தனது சிறு வயதிலேயே தனது தகப்பனாரிடமிருந்து ஆழமான தேசபக்தி சிந்தனைகளை வரித்துக் கொண்டார். நெல் உற்பத்தி செய்யும் விவசாயியான அவரது தகப்பனார், தனது ஓய்வு நேரங்களில் உள்ளூரிலிருந்த பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து வந்தார்.

கியாப் தனது 13ஆவது வயதில் மத்திய நகரான கியூவுக்கு (Hue) படிக்கச் சென்றார். அந்த நகரை பிரெஞ்சு காலனித்துவ ஆட்சியின் கீழான பொம்மை அரசு ஒன்று நிர்வகித்து வந்தது.

ஆனால் அவர் அங்கு பிரெஞ்சு காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிரான தேசியவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட காரணத்தால் அந்தப் பாடசலையிலிருந்து விரைவிலேயே விலக்கப்பட்டார். இது அவரை மார்க்சியம் பற்றிக் கற்றுக் கொள்வதற்கு தூண்டுதலாய் அமைந்தது. அவரது தீவிர அரசியல் நடவடிக்கைகள் காரணமாக அவர் தனது 18ஆவது வயதில் கைது செய்யவும்பட்டார். பின்னர் அவர் விடுவிக்கப்பட்டதும், முதன் முதலாக ஹனோய் நகருக்குச் சென்று பிரான்சியர்கள் நடாத்திய பல்கலைக்கழகம் ஒன்றில் சேர்ந்து சட்டப்படிப்பை மேற்கொண்டார்.

அதன் பின்னரான காலத்தில் அவர் முதல் தடவையாகத் வியட்நாமிய கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். அதன் விளைவாக தனது சக போராளி ஒருவரைத் திருமணம் செய்யும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆனால் அவர்களது திருமண வாழ்வு நீடிப்பதை பிரெஞ்சு காலனித்துவவாதிகள் அனுமதிக்கவில்லை. அவர்கள் கியாப்பின் மனைவியைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். பிரெஞ்சு சிறையில் நிலவிய மோசமான நிலைமைகள் காரணமாக அவர் சிறையிலேயே மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

அதன் பின்னர் கியாப் சீனா சென்றார். அங்கு அவர் சீனாவிலிருந்து கொண்டு வியட்நாமில் பிரெஞ்சு எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குத் தலைமைதாங்கி வந்த ஹோசிமின் அவர்களை முதன் முதலாகச் சந்தித்தார். இருவரும் தோழமையுடன் பல நாட்களாக வியட்நாமின் எதிர்காலம் குறித்து உரையாடினர்.

அதன் பின்னர் கியாப் வியட்நாம் திரும்பி அங்கு பிரெஞ்சு எதிர்ப்பு கெரில்லா நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த குழுக்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அங்கு அவர் தானும் முறைப்படி இராணுவப் பயிற்சி பெற்றதுடன், மேற்கத்தியர்களால் 'வியட்மின்' (Viet Minh) என்று அழைக்கப்பட்ட (வியட்நாமியர்களின் வார்த்தைகளில் – Doc Lap Dong Minh Vietnam) அமைப்பின் பொறுப்பாளராகவும் செயற்பட்டார்.

பிரெஞ்சுக்காரர்களுடன் நடாத்திய பேச்சுவர்த்தை முறிவடைந்ததைத் தொடர்ந்து, 1945இல் செப்ரெம்பரில் வியட்நாமை ஒரு சுதந்திர நாடாக ஹோசிமின் பிரகடனம் செய்தார். அதைத் தொடர்ந்து 1946 பிற்பகுதியில் முழு அளவிலான போர் வெடித்தது. இந்தக் கட்டத்தில் கியாப் அவர்கள் முழு வியட்நாமிய சமூகத்தையும் 'மக்கள் யுத்தம்' ஒன்றுக்காக அணிதிரட்டி வழி நடாத்த ஆரம்பித்தார்.

1954இல் அருகிலிருந்த லாவோஸ் நாட்டைப் பாதுகாக்கவென டியன் பியன் பூ என்ற இடத்தில் நிலை கொண்டிருந்த பிரெஞ்சு இராணுவத்தை கியாப் தலைமையிலான மக்கள் படை சுற்றி வளைத்து, அந்த மாபெரும் பிரெஞ்சு சைன்யத்தைத் தோற்கடித்தது.

பிற்காலத்தில் அமெரிக்கர்கள் வியட்நாமை ஆக்கிரமித்த போது, டியன் பியன் பூ செல்லும் சாலையின் முகப்பின் வாசலில் பின்வரும் வாசகங்கள் அடங்கிய பதாதை ஒன்று வியட்நாம் தேசபக்தர்களால் வைக்கப்பட்டிருந்தது:

"அமெரிக்கர்களே! இந்த வழியால் சென்ற 2,50,000 பேர் கொண்ட பிரெஞ்சு சைன்யம் ஒன்று என்றென்றைக்குமே திரும்பி வரவேயில்லை. அந்தக் கதி உங்களுக்கும் ஏற்படாதிருக்கட்டும்!"

ஆனாலும் கியாப் மேற்கொண்ட இராணுவ வழிமுறைகள் குறித்து மேற்கத்தைய விமர்சகர்கள் அடிக்கடி விமாசித்து வந்தனர். இதுபற்றி 2013இல் மரணமடைந்தவரும், கியாப் அவர்களைப் பேட்டி கண்டவரும், புலிட்சர் (Pulitzer) பரிசு பெற்றவரும், வியட்நாம் யுத்தத்தைக் களத்தில் நின்று பதிவு செய்தவருமான ஸ்ரான்லி கார்னோ (Stanley Karnow) பின்வருமாறு கூறுகிறார்:

"நீங்கள் கியாப்பின் தந்திரோபாயத்தைக் கொடூரமானது எனக் கூறலாம். ஆனால் அவரைப் பொறுத்தவரை அது ஒரு புனித இலட்சியம். ஹோசிமின்னுக்கு அடுத்ததாக 20ஆம் நூற்றாண்டில் வியட்நாமிய அனுபவங்களுக்கான மிக முக்கியமான ஆளுமை கியாப்".

வியட்நாம் பற்றி பல நூல்கள் எழுதியவரும், அமெரிக்காவின் பென்சில்வேனிய அரச பல்கலைக்கழகத்தின் கிழக்காசிய கற்கைகளுக்கான ஓய்வுபெற்ற பேராசரியருமான வில்லியம் டியூக்கர் (William Duiker) கூறுகையில், "அந்த நிலைமைகளில் அவர் வகுத்த பாதைக்காக கூடுதலான பெருமை கியாப்பையே சென்றடைய வேண்டும்" என்கிறார்.

மேலும் டியூக்கர் கூறுகையில், "பிரெஞ்சுக்கு எதிரான யுத்தத்தின் போது மக்கள் யுத்தம் என்ற கருத்தியலைக் கொண்டு அவர் நடாத்திய யுத்தம், அவரது பெரும் பிதுரார்ஜிதமாகும். அது ஒரு பலவீனமான சக்தி, அரசியலை இராணுவ ரீதியாகப் பயன்படுத்தி, பலமான, மிகவும் தொழில்நுட்ப ரீதியில் வளர்ச்சி அடைந்த சக்தியைத் தோற்கடித்ததின் குறியீடாக இருக்கின்றது" என்று தெரிவித்துள்ளார்.

வியட்நாம் யுத்தத்தின் போது வியட்நாமிய மக்கள் படையால் பிடிக்கப்பட்டு, ஐந்தரை ஆண்டுகளாக வட வியட்நாமின் கைதியாக வைக்கப்பட்டிருந்தவரும், பின்னர் அமெரிக்க செனட்டருமான ஜோன் மக்கெய்ன் (John Maccain) கியாப் மரணமடைந்த வேளையில் தனது ருவிற்றரில் கூறுகையில், "திறமையான போர்த்தந்திரி. ஒருமுறை அவர் என்னிடம் கூறுகையில், 'நாம் கௌரவமான எதிரியைக் கொண்டிருக்கிறோம்' எனக் குறிப்பிட்டார்" எனத் தெரிவித்துள்ளார்.

கியாப்பின் மரணச் செய்தியை அறிந்து கருத்து வெளியிட்ட பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் லோறென்ற் ஃபாபியஸ் (Laurent Fabius) கியாப் பற்றி வர்ணிக்கையில் அவரை "அசாதாரணமான மனிதர்" எனக் குறிப்பிட்டதுடன், "அவர் பிரெஞ்சு கலாச்சாரத்துடன் நன்கு பரிச்சயமானவர். பிரெஞ்சு மொழியில் சரளமாகப் பேசக்கூடியவர்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கியாப் அவர்கள் தனது வாழ்வின் இறுதித் தருணத்திலும் வியட்நாமிய மக்களின் நல்வாழ்வில் எவ்வளவு கரிசனை கொண்டிருந்தார் என்பதற்கு ஒரு உதாரணம், வியட்நாமில் அமைக்கப்படவிருந்த ஒரு பொக்சைற் (Bauxite) தொழிற்சாலை வியட்நாமிய மக்களின் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என்பதால், அதைத் தற்காலிகமாக நிறுத்தும்படி வியட்நாமிய பிரதமருக்கு அவர் ஒரு பகிரங்கக் கடிதம் எழுதியிருந்த சம்பவமாகும்.

கியாப் அவர்களின் பூவுடல் மரணித்துவிட்டாலும், அவரது புகழுடல் ஒருபோதும் மரணிக்காது. அது என்றென்றும் வியட்நாமிய மக்களின் மனங்களில் மட்டுமின்றி, விடுதலைக்குப் போராடும் அனைத்து உலக மக்களினதும் மனங்களிலும் வாழும்.

**ஹோசிமின் அவர்களின் சில கவிதை வரிகள்:**

"யன்னல் வழியாக அழகு நிலா பொழிகிறது
யாத்திடுக ஒரு கவிதை என்றெனக்குச் சொல்கிறது
மின்னல் மனப் போர் வீரன் நிலைமையிலே
யானுள்ளேன்
மீதமில்லை நேரமிங்கு கவியேதும் பாடுதற்கு"

(மிகச் சிறந்த கவிஞரான ஹோசிமின் ஒருமுறை சீனாவின் பிற்போக்கு கோமின்டாங் ஆட்சியாளர்களால் சிறை வைக்கப்பட்டிருந்த போது எழுதிய கவிதை ஒன்றின் சில வரிகளே இவை)

– பார்த்தசாரதி

5ம் பக்கத்தொடர்ச்சி...

அரசன் பதினைந்தாயிரம் கஹகப் பணங்களை வழங்கினான் என்றும் மகாவமிசம் விபரிப்பதனால், இவனின் பௌத்த மத ஈடுபாடுகள் தெளிவுபடுத்தப்படுகின்றன....

எல்லாள மன்னனுக்கும், துட்டகைமுனு மன்னனுக்குமிடையே நிகழ்ந்த போரானது, உண்மையில் தமிழ்ப் பௌத்தருக்கும், சிங்கள பௌத்தருக்குமிடையே ஏற்பட்டதொன்றாகும்.

எல்லாள மன்னன் பௌத்தனாக வாழ்ந்து, பௌத்த சிங்கள மக்களின் அபிலாசைகளை இடையூறின்றி நிறைவேற்றிய இலட்சியவாதியென மகாவமிசம் போற்றுவதனால், இப்போருக்கு மதப்பூசல் காரணமல்ல என்பது தெளிவாகின்றது. உண்மையில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் ஆவலாக இருந்த துட்டகைமுனுவே இனக்குரோதத்தைக் கருவியாகக் கொண்டு போரைத் தொடுத்தவனாகக் காணப்படுகின்றான்.

மற்றது, துட்டகைனு, எல்லாள மன்னனைக் கொன்றபின் கவலையுற்றிருந்த போது ஆறுதல் கூறவந்த பியகுகதீவுப் (புங்குடுதீவு) பௌத்த சங்கத்தினர் ஆதிநாகர் அல்லது ஆதிதிராவிடரால் உருவாக்கப்பட்டதொன்றாகும் என்பதில் சந்தேகமில்லை....

(இக்கட்டுரை திருமதி. தனபாக்கியம் குணபாலசிங்கம் B.A.Hons (Cey), M.A. (Madras) அவர்களின் ''இலங்கையிற் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாச்சாரமும்'' (மணிமேகலைப் பிரசுர வெளியீடு – பிரசுர ஆண்டு –2001)) என்ற நூலில் உள்ள சில பகுதிகளாகும். நூலாசிரியர் கொழும்பு பல்கலைக்கழக இந்துகலாச்சாரத்துறை விரிவுரையாளராகவும், களனிய பல்கலைக்கழக தொல்லியல்துறை பகுதிநேர விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். பின்னர் இலண்டன் நியூஹாம் மாநிலப் பிரிவின் பன்மொழிகள் துறையின் வாய்முறை மொழிபெயர்ப்பாளராக பணி புரிந்தவர்.

இதில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகள் 'வானவில்' இதழின் கருத்துக்களல்ல. சில தகவல்களையும், கண்ணோட்டங்களையும் அறிந்து கொள்வதற்காகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. நூலாசிரியருக்கும், வெளியீட்டாளருக்கும் எமது நன்றி) *

# தோசைகள் பலவிதம்! அதில் பருத்தித்துறைத் தோசை ஒருவிதம்!!

உடுப்பி உணவுகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட அறுபது இருக்கும். தோசை அதிலொன்று. முதலில் கிருஸ்ணர் பிரசாதமாகத்தான் இது வழங்கப்பட்டது. உடுப்பியில் கிருஸ்ணர் கோயில் எழுப்பப்பட்டது கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டு என்பதால் தோசையின் தோற்றமும் அப்போதுதான்...

தோசை ருசியாக இருப்பதற்கு அதன் அரவை நேரம் சரியாக இருக்கவேண்டுமென்பது உடுப்பிக்காரர்கள் சூட்சுமம். தோசை மாவு என்பது இட்லி மாவு மாதிரி நறநறவென்று இருக்கக்கூடாது. ரொம்பத் தண்ணியாகவும் ஆகிவிடக்கூடாது. சற்றே இளகிய வெண்ணெய் மாதிரி.... திரண்டிருக்க வேண்டும். அரிசி மற்றும் பருப்பைத் தனித்தனியே அரைத்து, இறுதியில்தான் சேர்த்துக் கலக்க வேண்டும். சில இடங்களில் இந்தக் கலவையில் லேசாக மஞ்சள் தூள் சேர்ப்பார்கள். நம் ஊரில் இந்த வழக்கம் இல்லை என்றாலும் ஆந்திரம், கர்நாடகம், வங்காள மாநிலங்களிலும் இலங்கையிலும் மஞ்சள் தூள் சேர்க்கிற வழக்கம் இப்போதும் இருக்கிறது.

இலங்கையில் பருத்தித்துறை தோசை என்றொரு தோசை மிகப் பிரபலம். இதில் அரிசி, உளுந்துடன்கூட சிறிது கோதுமை மாவும் நிறைய வெந்தயமும் சேர்ப்பார்கள். மாவு அரைத்தபின் புளிக்க வைக்குமுன் அதில் தென்னங்கள் அல்லது பனங்கள் சேர்ப்பது இந்தப் பருத்தித்துறை தோசையின் முக்கிய அம்சம்.

கத்தரிக்காயையும் வெங்காயத்தையும் சேர்த்து வதக்கி, பொரியலுக்கும் கூட்டுக்கும் இடைப்பட்ட பதத்தில் எடுத்து இதற்குத் தொட்டுக்கொள்ளத் தருவார்கள்.

அதிருசியாக இருக்கும் என்று அத்தனை இலங்கைத் தமிழர்களும் வருணிக்கும் இந்தத் தோசை ஏனோ ஈழத்தைத் தாண்டி வரவேயில்லை.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

# தலிபான் தலைவரின் கொலையால் பாகிஸ்தான் – அமெரிக்க – தலிபான் உறவுகள் சீர்குலைவு!

பாகிஸ்தான் அரசாங்கத்துக்கும், தலிபான் இயக்கத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறவிருந்த நேரத்தில் அமெரிக்காவின் ஆளில்லாத விமானம் நடாத்திய தாக்குதலில், பாகிஸ்தானின் தலிபான் தலைவர் ஹகிமுல்லா மெஸ்ஸூட் (Hakimullah Mehsud) கொல்லப்பட்டததைத் தொடர்ந்து, அமெரிக்காவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் புதிய முரண்பாடுகள் தோன்றியுள்ளன. இந்தத் தாக்குதல் அண்மையில் ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய பாகிஸ்தானின் பழங்குடி மக்கள் வாழும் பிரதேசமான வடக்கு வஸிர்றிஸ்ரானில் (Waziristan) நடைபெற்றது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்த பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தையை நடாத்தப் போவதில்லை என தலிபான்கள் அறிவித்துள்ளனர். அதேநேரத்திரத்தில் இந்தப் பேச்சுவார்த்தையைக் குழப்புவதற்காகத்தான், அமெரிக்கா திட்டமிட்டு இந்தத் தாக்குதலை நடாத்தி பாகிஸ்தான் தலிபான் தலைவரைக் கொலை செய்துள்ளது என பாகிஸ்தான் அமெரிக்க அரசு மீது குற்றம்சாட்டியள்ளது.

ஆனால் அமெரிக்கா பாகிஸ்தானின் குற்றச்சாட்டுக் குறித்து அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. அமெரிக்க – பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான நீண்டகால ஆழமான நட்புறவைப் பற்றி நன்கு தெரிந்த அரசியல் நோக்கர்களுக்கு பாகிஸ்தானின் குற்றச்சாட்டு இரு நாடுகளுக்கும் இடையிலான வழமையான ஊடல் என்ற கருத்து மட்டுமே உள்ளது.

இதுதவிர, அமெரிக்காவின் நடைமுறையை நன்கு தெரிந்தவர்களுக்கு, அமெரிக்கா நடாத்திய ஆளில்லா விமானத் தாக்குதல் ஆச்சரியமளிக்காது. ஏனெனில் அமெரிக்காவைப் பொறுத்தவரையில், மற்ற நாடுகளின் நலன்களைவிட – அது நெருங்கிய நட்டு நாடாக இருந்தாலும்கூட – அது பெரிதாகப் பேசி வரும் தனது 'தேசிய பாதுகாப்பு' மற்றும் தனது நலன்கள்தான் அதற்கு முக்கியம்.

அதிலும், அமெரிக்கா ஆளில்லா விமானம் மூலம் கொலை செய்த பாகிஸ்தான் தலிபான் தலைவர், அமெரிக்காவால் ஒருபோதும் மன்னிக்கப்பட முடியாத 'பயங்கரவாதி' ஆவார். ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்காவின் சி.ஐ.ஏ உளவு ஸ்தாபனத்தின் காரியாலயம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு இவரே சூத்திரதாரி எனக் கருதப்படுவதுடன், அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள 'ரைம்ஸ் சதுக்க'த்தின் மீதான தோல்வியடைந்த தாக்குதலுக்கும் இவரே பின்னணியில் இருந்ததாகக் கருதப்படுகிறது. இவருடைய தலைக்கு அமெரிக்கா 5 மில்லியன் டொலர் பெறுமதி விதித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளையில் இவர் பாகிஸ்தானிலும் ஆயிரக்கணக்கான பொதுமக்களினதும், பாதுகாப்புப் படையினரதும் மரணத்துக்கும் காரணகர்த்தா ஆவார்.

மறுபக்கம் அமெரிக்காவால் கொலை செய்யப்பட்டவரின் இடத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் பாகிஸ்தான் பிரிவு தலிபான் தலைவரும் சமானியப்பட்டவரல்ல. அஸ்மத்துல்லா சகீன் பிற்றானி (Asmatullah Shaheen Bhitani) என்ற பெயருடைய புதிய தலைவர்தான், இன்று உலகப் புகழ் பெற்றிருக்கும் பாகிஸ்தானிய மாணவச் சிறுமியான மலலா யூசா∴ப்ஸெய் (Malala Yousafzai) மீது தலிபான்கள் துப்பாக்கிச் சூட்டை நடாத்துவதற்கு பின்னணியில் இருந்தவர். இவர் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதை அவரது ஆதரவாளர்கள் AK47 துப்பாக்கியால் சுட்டும், விமான எதிர்ப்பு ஏவுகணைகளை ஏவியும் கொண்டாடியுள்ளனர்.

புதிய தலைவர் பதவியேற்றதும் விடுத்த அறிவித்தலில், தமது முன்னைய தலைவரை அமெரிக்கா ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடாத்தி கொன்றதற்காகத் தாம் பாகிஸ்தானை பழிவாங்கப் போவதாகச் சூளுரைத்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை பெயரளவில் பாகிஸ்தான் - அமெரிக்க உறவைச் சீர்குலைத்திருந்தாலும், பாகிஸ்தான் - தலிபான் உறவை உண்மையாகவே சீர்குலைத்துள்ளது. அதன் மூலம் பாகிஸ்தானில் உள்நாட்டு அமைதி வெகுதூரம் தள்ளிப் போயுள்ளது.

**- அஹ்மத்**

## அதிக பிரதிகள் விற்றுள்ள நூல்கள்!

உலகில் அதிக பிரதிகள் விற்றுள்ள நூல்களின் ஆசிரியர்களாக ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியரும், துப்பறியும் நாவலாசிரியை அகஸ்தா கிறிஸ்ரியும் திகழ்கின்றனர். இவர்கள் இருவரதும் நூல்கள் சுமார் 200 கோடி பிரதிகள் வரை விற்பனை ஆகியிருக்கின்றன! இவர்களுக்கு வெகுதூரம் பின்தள்ளித்தான், பிரெஞ்சு, ஜெர்மன், ருஸ்ய, சீன எழுத்தாளர்களின் நூல்கள் விற்பனையாகி இருக்கின்றன. இந்த அணிவகுப்பில் இந்திய எழுத்தாளர்கள் எவரும் நாமத்துக்கும் இல்லை.

# போருக்குப் பிந்தைய இலங்கையின் பொருளாதார நிலை!

இலங்கையில் 2009இல் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் பொருளாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் சம்பந்தமாக, அண்மையில் கொழும்பில் வங்கியாளர்களின் மாநாடு ஒன்றில் உரையாற்றிய மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் (Ajith Nivard Cabraal) விரிவாக எடுத்துரைத்திருக்கிறார். இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலவரத்தை எமது வாசகர்கள் விளங்கிக் கொள்வதற்காக அதன் சாராம்சத்தை சுருக்கமாகக் கீழே தந்துள்ளோம். அவர் கூறியவை வருமாறு:

- நாட்டில் ஏற்பட்டுள்ள சந்தைப் பொருளாதார வளர்ச்சி காரணமாக தனிநபர் வருமானம் ஆண்டொன்றுக்கு 2,900 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. இது முன்பிருந்ததைவிட இரண்டு மடங்காகும்.

- 2004இல் 24 பில்லியன் (Billion) அமெரிக்க டொலர்களாக இருந்த இலங்கையின் பொருளாதாரம் 59 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது.

- கடந்த நாலரை ஆண்டுகளாக பணவீக்கம் ஒற்றை இலக்கத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

- 15 வீதமாக இருந்த வறுமைக்கோட்டு எல்லை 6 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

- வேலையற்றோர் தொகை 4 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

- உள்கட்டமைப்பு சிறப்பான முறையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.


- வெளிநாட்டு சேமிப்பு 6 பில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பேணப்படுகின்றது.

- வெளிநாட்டுத் தனியார் முதலீடு 7 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

- 2009இல் 9.9 வீதமாக இருந்த பொது வரிப்பண பற்றாக்குறை 6.4 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

- 2012இல் உலகளாவிய வர்த்தக நிலையில் 102ஆவது இடத்தில் இருந்த இலங்கை தற்பொழுது 81ஆவது இடத்தை எட்டிப்பிடித்துள்ளது. இந்த வருட முடிவுக்குள் அந்த நிலை இன்னும் 10 எண்களால் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- 2005இல் 51 வீதமாக இருந்த மேல்மாகாணத்தின் தேசிய வருமானத்துக்கான பங்களிப்பு, 43 வீதமாகக் குறைக்கப்பட்டு, ஏனைய மாகாணங்களின் வளர்ச்சி அதிகரிக்கப்பட்டுள்ளது.



- வங்கிகளுக்கும், பங்குச் சந்தைக்குமான வெளிநாட்டு முதலீடு ஒழுங்கான முறையில் கிடைப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உலகளாவிய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் வங்கி முறைமையின் ஸ்திரத்தன்மை நன்கு பேணப்படுகிறது.
இந்த முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலை, புலிகளின் 30 வருட பயங்கரவாத நடவடிக்கைகள் முடிவுக்குக் கொண்டு வந்ததின் மூலமே சாத்தியமாயிற்று. அத்துடன் அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட சமாதானச் சூழ்நிலையும், அரசியல் ஸ்திரப்பாடுமே அடுத்த காரணமாகும்.

இந்தச் சூழ்நிலையில் '5+1' மையம் என்ற தொனிப்பொருளிலான முதலீட்டுக் கட்டமைப்பில் கப்பற் போக்குவரத்து, விமானசேவை, சக்தி வளம், புலமைசார்துறை மற்றும் வர்த்தகத்துறை என்பனவற்றில் புதிய முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுற்றுலாத்துறை பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளது.

மேலே கண்டவை யாவும் நாம் கடந்த காலத்தில் நிறைவேற்றியவை. இப்பொழுது எமக்கு முன்னால் உள்ள சவால்

எமது எதிர்காலப் பணயத்தில் நாம் சாதிக்க வேண்டிய விடயங்களாகும். அவை பின்வரும் விடயங்களாகும்.

• 100 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பொருளாதாரத்தை எவ்வாறு அடையப் போகின்றோம்?

• தனிநபரின் வருடாந்த வருமானத்தை 4,000 அமெரிக்க டொலர்களாக எவ்வாறு அதிகரிக்கப் போகின்றோம்.

• கடந்த காலத்தில் பல நாடுகளைச் சீரழித்த அழிவுகரமான 'மத்திய - வருமான கிடுக்கி' என்ற பொறியில் இருந்து எப்படி எம்மைப் பாதுகாக்கப் போகின்றோம்?

• எமது முன்னேற்றங்கள் வீழ்ச்சியடைந்துவிடாமல், நீடித்து நிலைத்திருப்பதை எவ்வாறு உறுதி செய்யப் போகின்றோம்?

• எமது செயல்பாட்டு வேகத்தை எவ்வாறு பாதுகாக்கப் போகின்றோம்?

• சுருக்கமாகச் சொல்வதானால், அடுத்த தசாப்தத்திலும் அதன் பின்னரும் இலங்கை நிச்சயமான முறையில் வளர்ச்சி பெறவும், ஸ்திரப்பாட்டை அடையவும் ஆன வழிவகைகள் என்ன?

இவற்றை அடைவதற்கு பல்வேறு வகையான மூல விடயங்கள் உள்ளன. அவையாவன:

• முதலாவதாக, பலமான பிரபஞ்சரீதியான அடிப்படைகளைப் பேணுவதுடன், அதன் செயற்பாட்டை சாதகமான முறையில் தொடர வேண்டும். இதன் நடைமுறை அர்த்தம் என்னவெனில், பணவீக்கத்தை குறைந்த மட்டத்திலும் ஸ்திரமாகவும் அடுத்த தசாப்தத்தில் பேண வேண்டும் என்பதாகும்.

• இரண்டாவதாக, 7 வீதத்திற்கும் அதிகமான வளர்ச்சியை அடைவதற்காக, சேமிப்பு அல்லது முதலீட்டில் உள்ள இடைவெளியை நிரப்புவதற்காக இலங்கை ஒழுங்கான வெளி முதலீட்டைக் கவர வேண்டிய தேவை உள்ளது.

• மூன்றாவதாக, நிதி முறைமையின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் தேவை எமக்குள்ளது.

• நான்காவதாக, வறுமையைக் குறைக்கும் மூலோபாயங்களை நாடு கண்டுபிடிப்பதுடன், பிராந்தியங்களின் வளர்ச்சியில் ஒரு சமாந்தர நிலையை உருவாக்குவதற்கான மூலோபாயங்களையும் உருவாக்க வேண்டும். கடந்த நாலரை ஆண்டுகளாக வட மாகாணத்தில் செய்த பாரிய முதலீடுகள் காரணமாக, அந்த மாகாணம் நியாயமான அளவுக்கு மற்றைய மாகாணங்களின் வளர்ச்சி நிலையை எட்டிப்பிடித்துள்ளது. இது ஒரு பிரமிக்கத்தக்க பெறுபேறாகும்.

• ஐந்தாவதாக, நாட்டின் உற்பத்தி மட்டங்களை உயர்த்த வேண்டிய தேவை இருக்கின்றது. அதேவேளை தற்போதுள்ள பாரம்பரிய தொழிற்துறைகளிலிருந்து பெருமளவிலான வேலைச் சக்தியை நமது பொருளாதாரத்தில் பதிதாகத் திறந்துள்ள துறைகளுக்கு மாற்ற வேண்டும்.

• ஆறாவதாக, உலகளாவிய தர நிலைகளில் இலங்கை தனது நிலையைக் கட்டாயமாகத் தொடர்ந்து முன்னேற்ற வேண்டும். ஏறத்தாழ 30 வருடங்கள் நீடித்த பயங்கரவாத அச்சுறுத்தல்களால் எமது நாடு உலக அரங்கில் பல முனைகளில் பின்தங்கிய நிலையில் உள்ளது.

• ஏழாவதாக, அடுத்த சில ஆண்டுகளுக்கு இலங்கை அரசியல் ஸ்திரத்தன்மையில் முன்னேற்றத்தை வெளிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. மற்றைய பல நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் ஜனநாயகத்தின் உயர் விழுமியப் பண்பும், சமாதான சூழ்நிலைகளும் நிலவுகின்றன என்பதை நாம் அறிவோம்.

நாம் யுத்தத்திற்குப் பின்பு பல சாதனைகளை ஈட்டியிருந்த போதிலும், இலங்கைக்கு எதிரான சக்திகளும், புலம்பெயர் சக்திகளும் எம்மைப்பற்றித் தொடர்ந்தும் பொய்யானதும், எதிர்மறையானதுமான ஒரு தோற்றப்பாட்டை உலக அரங்கில் ஏற்படுத்த முயன்று வருகின்றன. ஆனால் இவை எல்லாவற்றையும் கடந்து எமது வெற்றிப் பயணத்தைத் தொடர்வோம்.

**தொகுப்பு: அருள்**

## மனித குலத்திற்கு எச்சரிக்கை!

"கடைசி மரத்தையும் வெட்டிய பின்னர், கடைசி மீனையும் பிடித்த பின்னர், காற்றின் கடைசித் துளியையும் மாசுபடுத்திய பின்னர், ஆற்றின் கடைசிச் சொட்டு நீரையும் விசமாக்கிய பின்னர்தான் தெரிய வரும், இந்தப் பணத்தைத் தின்ன முடியாது என்று".

-இவை 'செவ்விந்தியர்கள்' என அழைக்கப்படும் அமெரிக்கப் பழங்குடி மக்கள், நவீனத்துவம் என்ற பெயரில் முதலாளித்துவ ஆளும் வர்க்கம் இந்தப் பூமியில் செய்யும் அழிவு வேலைகளைக் கண்டு ஆற்றாமையுடன் சொன்ன வாக்கியங்கள்

## தமிழ்நெற் இணையத்தளத்தின் புளுகு

ஜெனரல் கியாப்பின் மறைவையொட்டி தமிழ்நெற் என்கின்ற ஆங்கில இணையத்தளம் வெளியிட்ட செய்தியில், 1980களின் முற்பகுதியில் புலிகள் ஜெனரல் கியாப்பின் புத்தகத்தை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டதாக கூறியுள்ளது. (இணைப்பு: http://www.tamilnet.com/art.html?catid=13&artid=36719) இது பாசிச புலிகளுக்கு இடது தத்துவ முலாம் பூசும் வேலை.

மறைந்த தோழர் விசுவானந்தேவனின் முயற்சியால், 1985இல் தமிழில் மொழிபெயர்க்கபட்ட ஜெனரல் கியாப்பின் 'புரட்சிகர மக்களை ஆயுதபாணியாக்கலும் மக்கள் படையும்' என்ற நூல், தோழர் சந்ததியாருக்கு சமர்ப்பணம் செய்து வெளியிடப்பட்டது. விசுவானந்தேவன் இல்லாத நிலையில், அவரது அரசியல் செயற்பாடுகளை தமக்கு சாதகமாக்க பலர் முனைந்து வருவதுபோல், புலிகளின் ஊதுகுழலான தமிழ்நெற்றும் முனைந்துள்ளது. *

# வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனை அவதூறு செய்துள்ள சினிமாக்கார சீமான்!

அண்மையில் 'கல்கி' வார இதழ் நாம் தமிழர் கட்சியின் தலைவரும், சினிமாக்காரருமான சீமானை பேட்டி கண்டது. அந்தப் பேட்டியின் போது வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்து வரும் சில கருத்துக்கள் குறித்தும் அவரிடம் வினவப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதிலில் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் குறித்து மிகவும் அலட்சியமாகப் பதிலளித்திருக்கிறார். அவரிடம் கேட்ட கேள்வியும், அவரது பதிலும் வருமாறு:

**கேள்வி:** ஒருங்கிணைந்த இலங்கைக்குள்தான் ஈழமக்கள் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள விரும்புகிறார்கள் என்றும், தமிழ்நாட்டுத் தமிழர்கள் தனிஈழம் என்று பேசி எங்களை மேலும் இன்னல்களுக்கு ஆளாக்கக்கூடாது என்றும் வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் பேசியிருக்கிறரே?

**சீமான் பதில்:** "அவரைப் பொருட்படுத்த வேண்டாம்...' ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க விரும்புகிறார்கள்' என்று இப்போது சொல்லும் விக்னேஸ்வரன் தேர்தல் பிரச்சாரத்தின்போது, 'தனி ஈழம் தேவையில்லை' என்று பேசினாரா?....தனி ஈழம் குறித்து விக்னேஸ்வரன் பொது வாக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்வாரா? தமிழகத் தலைவர்கள் தனி ஈழம் குறித்துப் பேசினால் துன்பங்கள் அதிகமாகும் என்று பயப்படும் விக்னேஸ்வரன் எப்படித் துணிச்சல் காட்டி சர்வாதிகாரி ராஜபட்சேவிடம் தமிழர்களுக்கு உரிமையும் அதிகாரத்தையும் பெற்றுத் தரப் போகிறார்?.... விக்னேஸ்வரன் எல்லை நமக்குப் புரிகிறது. அதற்காக அவர் தாய்த் தமிழகத் தலைவர்களைக் கட்டுப்படுத்தக் கூடாது... எனவே, முதலில் விக்னேஸ்வரன் தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீட்டுத் தரட்டும். அதில் வெற்றி பெற்றால் சந்தோசமே!"

இவ்வாறு கூறியிருக்கிறார் சினிமாக்கார சீமான்!

தமிழகத்தில் தேர்தலில் போட்டியிட்டால் ஒரு தொகுதியில்கூட வெற்றிபெற லாயக்கில்லாத, புலம்பெயர் புலிப் பினாமிகளின் பணத்தில் வயிறு வளர்த்து வரும் சீமான், இலங்கைத் தமிழ் தலைவர்களில் எவருமே பெற்றிராத வகையில் 1,33,000 க்கும் அதிகமான விருப்பு வாக்குகள் பெற்று வெற்றிபெற்ற வடபகுதித் தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற ஒரு முதலமைச்சரை ஒரு கிள்ளுக்கீரையாக இப்படி அவதூறு செய்திருக்கிறார். அவரது இந்த 'பொறுக்கித்தனமான' பதிலுக்கு இதுவரை எந்தவொரு தமிழக அரசியல்வாதிகளும் (வலதோ இடதோ) கண்டனம் தெரிவித்ததாகத் தெரியவில்லை.

அதுமட்டுமல்ல, தாய்த் தமிழகம், சேய்த் தமிழீழம் என்று பேசி, இலங்கைத் தமிழினத்தை ஒரு தேசிய இனம் என்ற அந்தஸ்திலிருந்து தரம் தாழ்த்தியும் கருத்துச் சொல்லியிருக்கிறார். இந்த மாதிரி ஒரு கருத்தை பிரித்தானியர், அமெரிக்கர்கள், கனடியர்கள், அவுஸ்திரேலியர்களைப் பார்த்து, 'நாங்கள்தான் உங்களின் தாய் ஆங்கிலேயர்கள்' என்று கூறினால், எப்படியான பிரதிபலிப்புத் தோன்றும் என்பது நமக்கெல்லாம் தெரியும். பிரித்தானியருக்கு எதிரான சுதந்திரப்போரையே அமெரிக்க மக்கள் தமது பெருமையாக உணர்வுபூர்மாக அனுபவிப்பவர்கள்.

இந்த தமிழக இனப் பிழைப்புவாதிகளும், சினிமா கழைக்கூத்தாடிகளும் நாமகரணம் சூட்டி அழைக்கும் 'கொடுங்கோலன் ராஜபட்சே' விட்டாலும், இந்த தமிழகப் பிழைப்புவாதிகள் ஈழத் தமிழர்களை நிம்மதியாக இருக்கவிடமாட்டார்கள் என்பது மட்டும் நிச்சயம்! *

# ஈரானில் பெண்கள் பகிரங்கமாக அமர்ந்து உதைபந்தாட்டம் பார்க்க முடியாது!

கடும்போக்கு இஸ்லாமிய கோட்பாடுகளின் அடிப்படையில் ஆட்சி நடைபெற்று வரும் ஈரான் இஸ்லாமிய குடியரசில் பெண்கள் பொது விளையாட்டு அரங்குகளில் உட்கார்ந்து உதைபந்தாட்டத்தையோ, இதர விளையாட்டு நிகழ்ச்சிகளையோ பார்ப்பதற்கு தடை இருந்து வருகிறது. ஈரான் (பெர்சியா) மனித நாகரிகத்தின் பிறப்பிற்குக் கருப்பையாகவும், அதன் வளர்ச்சிக்கு தொட்டிலாகவும் விளங்கிய பூமி என வர்ணிக்கப்படும் ஒரு நாடு. அதுமட்டுமல்லாமல், இன்று நவீன விஞ்ஞான வளர்ச்சியை எட்டிப்பிடித்து அணு ஆராய்ச்சியிலும் மிக வேகமாக முன்னேறி வரும் ஒரு நாடு. இருந்தும் அந்நாட்டுப் பெண்கள் ஆண்களுடன் சரிநிகர் சமானமாக விளையாட்டுகளைக்கூட கண்டு களிக்க முடியாத சமூக அமைப்பு அங்கு உள்ளது.

ஈரானியப் பெண்கள் உதைபந்தாட்ட நிகழ்ச்சிகளை பகிரங்க இடங்களில் இருந்து பார்ப்பதற்கு இருந்து வரும் தடையை நீக்கும்படி, சர்வதேச உதைபந்தாட்ட சங்க சம்மேளனத்தின் தலைவர் செப் பிளாற்றர் (Sepp Blatter) சமீபத்தில் ஈரானிய அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருக்கிறார். அண்மையில் அவர் ஈரானிய தலைநகர் தெஹ்ரானுக்கு விஜயம் மேற்கொண்டு ஈரானிய அதிகாரிகளிடமும், ஈரானிய பாராளுமன்ற சாபாநாயகர் அலி லரிஜானியிடமும் (Ali Larijani) பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பின்னரே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதேவேளை சவூதி அரேபியாவில் பெண்கள் வாகனங்கள் ஓட்டுவதற்கு இருந்துவரும் தடையை எதிர்த்து அந்நாட்டுப் பெண் அமைப்புகள் போர்க்கொடி தூக்கிப் போராடி வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த இரு நாடுகளில் ஈரான் தீவிரமான அமெரிக்க எதிர்ப்பு நாடாகும். சவூதி அரேபியாவோ தீவிரமான அமெரிக்க விசுவாச நாடாகும். சர்வதேச அரசியல் நிலைப்பாட்டில் இவ்விரு நாடுகளும் எதிரும் புதிருமாக இருந்தாலும், பிரபுத்துவ அடிப்படையிலான சட்டங்களை இஸ்லாமிய சட்டங்கள் என்ற போர்வையில் கடுமையாக அமுல்படுத்தி மக்களை வதைத்து வருகின்றன.

**– பாமியன்**

முன்பக்கத்தொடர்ச்சி...

எதிர்நோக்கிய போதிலும், தாம் வாழ்ந்த மண்ணை விட்டு வெளியேறாதவர்கள்.

அவர்களது நம்பிக்கை வீண் போகவில்லை. 2009ஆம் ஆண்டு இந்த யுத்தத்தை விடாப்பிடியாக நடாத்தி வந்த கொடூரப் புலிகளை ஒழித்துக் கட்டியதின் மூலம் அரசாங்கம் நாட்டு மக்களின் வாழ்வில் மட்டுமின்றி, வட பகுதி மீனவர்களின் வாழ்விலும் மீண்டும் ஒளியை ஏற்படுத்தியது. அதுவரை கடலில் மீன் பிடிப்பதற்கு இருந்து வந்த தடைகள் படிப்படியாக நீக்கப்பட்டு, இன்று நமது மீனவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் கடலுக்குச் சென்று பீன் பிடிக்கலாம் என்ற சுதந்திரமான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

மீன் பிடிக்கும் உரிமையை மட்டுமின்றி, மீனவர்கள் தொழில் செய்வதற்குத் தேவையான உபகரணங்கள் சிலவற்றை இலவசமாகவும், மீதியானவற்றையும் பணத்தையும் நீண்டகால இலகு கடன் அடிப்படையிலும் வழங்கி வருகிறது. இவையெல்லாம் எமது மீனவர்கள் எதிர்பார்க்காத அதிர்ஸ்டங்கள் என்று குறிப்பிட்டாலும் மிகையாகாது.

போர் முடிந்து அமைதி தோன்றி இவ்வளவு வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத்த போதும், வட பகுதி மீனவ மக்களின் வாழ்க்கை தொடர்ந்தும் கண்ணீர்க்கதையாகவே தொடர்கிறது. இப்பொழுது துன்பம் 'சிங்களப் பேரினவாதிகளிடம்' இருந்து வரவில்லை. அல்லது பாசிசப் புலிகளிடம் இருந்து வரவில்லை. 20 மைல் தூரத்தில் கடலுக்கு அப்பால் உள்ள 'இரத்தத்தின் இரத்தங்களான' அல்லது 'தொப்புள்கொடி உறவுகளான' அல்லது 'தாய்த் தமிழ் உறகளிடம்' இருந்து வருகிறது. ஆம், தமிழக மீனவர்கள் எமது மீன் வளங்களை அத்துமீறிச் சூறையாடுவதுடன், எமது மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களையும் நாசம் செய்துவிட்டுப் போகின்றனர். அவர்கள்தான் இன்று நமது மீனவர்களின் வாழ்க்கையைச் சூறையாடுபவர்களாக இருக்கின்றனர்.

போர் காரணமாக எமது மீனனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதற்கு தடை இருந்த போது, தமிழக மீனவர்கள் எமது கடலில் கேட்பாரின்றி வந்து மீனபிடித்துச் சென்றனர். (ஆனால் இந்தப் பிரச்சினை அதற்கு முன்பும் இருந்தது என்பது வேறு விடயம்) சரி, அதுதான் போகட்டும். எம்மால் அனுபவிக்க முடியாததை எமது சகோதரர்கள் அனுபவித்துப் போகட்டும் என்று விட்டுவிடலாம். ஆனால் போர் முடிவுற்று, எமது அரசாங்கமே எமது மீனவர்கள் எமது கடல் பிரதேசத்தில் சுதந்திரமாக மீன் பிடிக்கட்டும் என்று விட்டுவிட்ட பின்னரும், தமிழக மீனவர்கள் அடாவடித்தனமாக எமது கடல் வளங்களை வாரிச் செல்வது எந்த விதத்தில் நியாயம்? அதுவும் தினமும் சராசரி 500 தமிழக இழுவைப் படகுகள் எமது கடல் பிரதேசத்தில நுழைந்து மீன்பிடிப்பதென்றால், அது ஒரு சாதாரணமான விடயமா?

தமிழக மீனவர்கள் சாதாரணமான முறையில் எமது கடலில் நுழைந்து மீன் பிடிக்கவில்லை. எமது கடலில் தடை செய்யப்பட்ட இழுவைப் படகுகளையும், மீன்பிடி உபகரணங்களையும் பயன்படுத்தி மீன் பிடிக்கிறார்கள். பொன் முட்டை இடும் ஒரு வாத்துப் பற்றியும், அதை ஒரே நாளில் பெற முயன்ற பேராசைக்காரன் பற்றியும் நம்மில் எல்லோரும் சிறு வயதில் படித்திருப்போம். அந்தப் பேராசைக்காரன் போலவே தமிழக மீனவர்களும் நடந்து கொள்கிறார்கள். ஒரே நாளில் எல்லா பொன் முட்டைகளையும் எடுத்துவிடும் பேராசையில் அந்த வாத்தைக் கொல்வது போல, எதிர்காலத்தில் கடல் வாழ் உயிரினங்கள் இனப்பெருக்கம் செய்ய முடியாதபடி, பெரிய மீன்களிலிருந்த குஞ்சு மீன்கள் வரை தமிழக மீனவர்கள் தாம் பயன்படுத்தும் மடி வலையில் வாரி அள்ளிச் சென்று விடுகிறார்கள்.

இந்த நிலைமையில் எமது கடற்படையினர் எமது மீனவர்களைப் பாதுகாதப்பதற்காகவும், எமது இறைமையைப் பாதுகாப்பதற்காகவும் தமிழக மீனவர்களைத் தடுத்து நிறுத்தினால், அல்லது கைது செய்தால், 'ஐயோ! சிங்கள அரச படை தமிழக மீனவர்களைக் கொடுமைப்படுத்துகிறது' என தமிழக அரசும், அரசியல்வாதிகளும் கூக்குரல் எழுப்புகிறார்கள். ஆர்ப்பாட்டம் செய்து ஊர்வலம் போகிறார்கள். 'பந்த்' நடத்துகிறார்கள். அதாவது தமது கடற்கொள்ளையைச் சட்டப்படி தொடர அனுமதிக்க வேண்டும் என மிரட்டுகிறார்கள். இந்த அமர்களத்தில் வலது – இடது என்ற வேறுபாடில்லாமல் எல்லா தமிழக ஓட்டுக் கட்சிகளும் ஈடுபடுகிறார்கள். தாம் 'ஓட்டுப் பொறுக்கிகள்' அல்ல, புரட்சிவாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் தீவிர இடதுசாரிகள் கூட, தமிழக மீனவர்களின் அடாவடித்தனத்தைக் கண்டித்து, 'ஈழ' மீனவர்களுக்காக குரல் எழுப்புகிறார்கள் இல்லை.

இவ்வளவையும் செய்துகொண்டு ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்காக நீலிக்கண்ணீர் வேறு வடிக்கிறார்கள். ஏன் இந்த நடிப்பு? ஏன் இந்த இரட்டை நாடகம்? பெரும்பாலான தமிழக அரசியல்வாதிகள் சினிமாக்காரர்கள் என்பதால், இதிலும் நடிக்கிறார்களா?

உண்மை அது மட்டுமல்ல. தி.மு.க, அ.இ.அ.தி.மு.க என இரண்டு திராவிடப் பிழைப்புவாதக் கட்சிகளும் இந்தப் பிரச்சினையில் தீவிரம் காட்டுவதற்கு முக்கிய காரணம் உண்டு. அதாவது இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்து அத்துமீறி மீன்பிடிக்கும் பெரும்பாலான தமிழக மீனவர்கள் அன்றாடக் கூலிக்காக வருபவர்கள். இழுவைப் படகுகள் எல்லாமே பெரும்பாலும் பெரிய முதலாளிகளுக்குச் சொந்தமானவை. அந்த பெரும் முதலாளிகள் இரண்டு திராவிடக் கட்சிகளுக்கும் இலட்சக்கணக்கில் தேர்தல் நேரத்தில் பணத்தை வாரி வழங்கும் அந்தக் கட்சிகளின் ஆதரவாளர்கள். எனவேதான் ஜெயலலிதாவும், கருணாநிதியும் இந்தப் பிரச்சினையில் அடிக்கடி குரலெழுப்புவதுடன், இந்தியப் பிரதமருக்கும் கடிதம் எழுதுகின்றனர். படகு முதலாளிகளும், அவர்களது அரசியல் தலைமைக் கொடுமுடிகளும் பாதுகாப்பாக

இருந்து பணம் சம்பாதிக்க, கடலுக்குச் சென்று அடியும் உதையும், சில வேளைகளில் துப்பாக்கிச் சூடும் வாங்குபவர்கள் இந்த அன்றாடங் காய்ச்சிகளான ஏழைத் தமிழக மீனவர்கள்தான்.

ஆனால் இந்த திராவிட தமிழின நாயகர்களும், நாயகிகளும் திரும்பத் திரும்ப குரல் எழுப்பினாலும், இந்திய மத்திய அரசாங்கம் பெரும்பாலும் வாய்மூடி மௌனமாகவே இருந்து வருகிறது. அல்லது காமராஜர் பாணியில், 'ஆகட்டும் பார்க்கலாம்' என பிரதமர் ஒரு வரியில் ஒரு மொட்டைக் கடுதாசியைப் பதிலாக எழுதி விடுகிறார். இந்திய அரசு இப்படி மெத்தனமாக இருப்பதற்குக் காரணம், தமிழக மீனவர்கள் செய்வது தவறு என்பது அவர்களுக்கும் தெரியும்.

இதற்கு உதாரணங்களாக இங்கு இரண்டு விடயங்களைக் குறிப்பிடலாம். அண்மையில் தமிழகத்தின் பிரபலமான வார இதழான 'ஆனந்த விகடன்' ஒரு கேலிச் சித்திரத்தை வெளியிட்டிருந்தது. அதில் ஒரு அரச அதிகாரி கையில் ஒரு கடிதத்தை வைத்திருக்கிறார். அதில் ஆங்கிலத்தில் தமிழக முதலமைச்சரின் கடிதம் என்று இருக்கிறது. மறுபக்கத்தில் ஒரு தண்ணீர் தொட்டியில் (அழகுக்கு வைப்பது போன்ற) மீன்கள் இருக்கின்றன. அந்த அதிகாரியைப் பார்த்து பிரதமர் மன்மோகன் சிங் கோபத்துடன் கூறுகிறார்:

'இதே தொல்லையாகப் போச்சு. எதற்காக இந்த மீனவர்கள் இலங்கை, பாகிஸ்தான், ஈரான் என்று மீன் பிடிக்கப் போகிறான்கள். வீட்டிலேயே ஒரு தொட்டியைக் கட்டி அதில் மீன்களை வளர்த்துப் பிடித்தால் என்ன?' என்று கேட்கிறார். (ஆனந்த விகடனில் வந்த வார்த்தைகளை விட இது சற்று மாறுபாடாக இருக்கலாம். ஆனால் சாராம்சம் இதுதான்)

இன்னொரு விடயம், சமீபத்தில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்ட சில தமிழக மீனவர்கள் தமது ஊர் திரும்பிய பின்னர் கருத்து வெளியிட்ட பொழுது, தம்மை இலங்கையில் இருக்கின்ற இந்தியத் தூதரக அதிகாரிகள் சரியாக நடாத்தவில்லை என்றும், 'உங்களால் பெரிய தொல்லை' என்று திட்டியதாகவும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இந்த இரண்டு விடயங்களும் தமிழக மீனவர்களின் ஊடுருவல் பற்றி இந்திய அரசு என்ன கருதுகிறது என்பதற்கு உதாரணங்கள்.

தமிழக மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்க இலங்கை கடற்படை நடவடிக்கை எடுத்தால், சிங்கள அரசின் அடாவடித்தனம் என தமிழக அரசியல்வாதிகள் கூக்குரல் இடுகிறார்கள். நமது மீனவர்கள் சார்பாக யாராவது (ஈ.பி.டி.பி போன்ற கட்சிகள்) ஊர்வலம் நடத்தினால், அதை அரச எடுபிடிகளின் சதி என்கிறார்கள். மீனவ அமைப்புகள் சுயாதீனமாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டாலும், அதற்கு இலங்கை அரசு சார்பு முத்திரை குத்துகிறார்கள்.

வானத்திற்கும் பூமிக்கும் இடையில் உள்ள அனைத்துக்கும தீர்வை முன்வைக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், மனோகணேசன் வகையறாக்களோ இந்தப் பிரச்சினையில் நிரந்தர ஊமைகளாகி விடுகிறார்கள்.

எது எப்படியிருந்த போதிலும், நமது மீனவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அரசாங்கமும், நாட்டுப்பற்றுள்ள அரசியல் கட்சிகளும், மீனவர் சங்கங்களும் தொடர வேண்டும். அதேவேளை அதற்கும் அப்பால், தற்பொழுது தெரிவு செய்யப்பட்டுள்ள மாகாணசபைக்கு இந்த விடயத்தில் மிக முக்கியமான பங்கு ஒன்று இருக்கிறது.

அதிலும் வட மாகாணசபை முதலமைச்சராக அமோகமான விருப்பு வாக்ககளுடன் தெரிவு செய்யப்பட்டுள்ள, எந்தவொரு கட்சியையும் சேராத, உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்ததால் நீதியாகச் செயல்படுவார் என்ற எதிர்பார்ப்பு உள்ளாகி இருக்கின்ற, மதிப்புக்குரிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இந்த விடயத்தில் அக்கறை எடுத்துச் செயல்பட வேண்டும். வட மாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், முதலமைச்சர் விக்னேஸ்வரனும் அமோக வெற்றிபெறுவதற்கு, இந்த வட பகுதி மீனவர்களின் வாக்குகளும் கணிசமான பங்கை வகித்துள்ளன என்பதை அவர்கள் மறுத்துவிடவோ, மறந்துவிடவோ முடியாது.

வட மாகாணசபை இந்தப் பிரச்சினையில் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாக இருந்தால், தமிழக மீனவர்களின் ஊடுருவலை ஓரளவாவது கட்டுப்படுத்த முடியும் என்பதுடன், நமது மீனவர்கள் பாதகாக்கப்படவும் வழி ஏற்படும். குறைந்த பட்சம் எமது மீனவர்களுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வு, ஒரு நம்பிக்கையாவது ஏற்படும்.

வட மாகாணசபையும், அதனை வழி நடாத்தும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களும் தமது இனத்தின் ஒரு பகுதி மக்களின் இந்த மனிதாபிமானப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படுவார்களா? *

---

8ம் பக்கத்தொடர்ச்சி...

இன்றைக்கு தோசைக்குப் பல முகங்கள் வந்துவிட்டன. வெங்காய தோசை, வெள்ளைப்பூண்டுத் தோசை, மசாலா தோசை, முட்டை தோசை, கல் தோசை, இளந் தோசை, குண்ணுத் தோசை, ரவா தோசை, தக்காளி தோசை, வெஜிடபிள் தோசை, வெறும் ஊத்தப்பம், ஆனியன் ஊத்தப்பம், பேப்பர் தோசை, பெப்பர் தோசை, புதினா தோசை...

ஆனால் தோசைக்கு உருளைக்கு கிழங்கு மசாலாதான் சரியான ஜோடி என்பதைக் கண்டுபிடித்த மாமேதை யாரென்று மட்டும் யாருக்கும் தெரியாது!

(பா.ராகவன் என்பவர் 'குமுதம் றிப்போட்டர்' இதழில் தொடர் கட்டுரையாக எழுதி பின்னர் 'உணவின் வரலாறு' என்ற பெயரில் வெளிவந்துள்ள நூலிலிருந்து இப்பகுதி எடுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கட்டுரை ஆசிரியருக்கும், நூலை வெளியிட்ட கிழக்கு பதிப்பகத்துக்கும் நன்றி) *

# இலங்கையில் 10 இலட்சம் பாடசாலைப் பிள்ளைகளுக்கு போதிய சுகாதார வசதிகள் இல்லை!

— ஆய்வில் தகவல்

இலங்கையின் சனத்தொகையில் (மொத்தம் 21 மில்லியன்) 89 வீதமான மக்களுக்கு மலசலகூட வசதிகள் (Sanitation) இருந்தபோதிலும், ஏறத்தாழ 1 மில்லியன் (10 இலட்சம்) பாடசாலைப் பிள்ளைகள் – அதாவது இலங்கையில் உள்ள பாடசாலைப் பிள்ளைகளில் மூன்றிலொரு பங்கினருக்கு – பாதுகாப்பான மலசலகூட வசதி இல்லை எனத் தெரிய வந்திருக்கிறது.

2011இல் நாடு தழுவிய ரீதியில் மேற்கொண்ட ஆய்வின்படி நாட்டிலுள்ள 9,500 ஆரம்ப, இரண்டாம் தர பாடசாலைகளில் 1,300 பாடசாலைகளிலும், ஏறத்தாழ 180,000 குடும்பங்களுக்கும் அவர்களது இயற்கை உபாதைகளைக் கழிப்பதற்கான போதிய வசதிகள் இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இத்தகவல்களை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதி பொதுமுகாமையாளர் தீப்தி சமணசேகர (Deepthi Sumanasekera) சமீபத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வின் போது, பாடசாலைகள், கரையோரப் பிரதேசங்கள், மலையகத் தோட்டப் பகுதிகள் என்பனவற்றில் சுகாதார வசதிகளில் பெரும் இடைவெளி இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய பிரதேச மக்கள் வரலாற்று ரீதியாகவே பெரும்பாலும் போதிய வருவாயின்மை, கல்வி வசதிகள் இல்லாமை, சௌக்கிய வசதிகள் குறைவு என்பனவற்றால் பாதிக்கப்பட்டவர்களாவர்.

'இந்தப் பாடசாலைகளில் ஒன்றில் மலசலகூட வசதிகள் இல்லை அல்லது இருக்கின்ற மலசலகூடங்களுக்கு தண்ணீர் வசதி இல்லை' என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் செயலாளர் அமரானந்த அபேகுணசேகர (Amarananda Abeyagunasekera) கூறுகின்றார்.

இந்தப் பிரச்சினையால் கூடுதலான பாதிப்புக்கு உள்ளாகி இருப்பவர்கள், இப்பாடசாலைகளில் கல்வி கற்கும் பருவமடைந்த பெண்பிள்ளைகளாவர். குறிப்பாக அவர்களுக்கு மாதவிடாய் ஏற்படும் சமயங்களில் பாடசாலைகளில் போதிய மலசலகூட மற்றும் சுகாதார வசதிகள் இல்லாமையால் இரண்டு மூன்று நாட்கள் பாடசாலை செல்வதைத் தவிர்த்து விடுகின்றனர். இதனால் அவர்களது கல்விக்கு பாதிப்பு ஏற்படுகின்றது.

இதுதவிர, ஒரு ஆய்வில் மாத்தறை மாவட்டத்திலுள்ள 35 பாடசாலைகளில் 23இல் சுத்தமான குடிநீர் இல்லாதது தெரிய வந்துள்ளது. (யுத்தம் எட்டியும் பார்க்காத மாத்தறை மாவட்டத்தில் இப்படி என்றால், 30 வருடங்களாகப் போரில் சிக்கியிருந்த வடக்கு கிழக்கு பாடசாலைகளில் நிலைமை எப்படி இருக்கும்?)

நேபாள தலைநகர் காத்மண்டுவில் (Kathmandu) நடைபெறவுள்ள தென்னாசிய நீர் மற்றும் சுகாதார வசதிகள் மாநாட்டுக்காக இலங்கையின் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தயாரித்த ஒரு பத்திரத்தில், இலங்கையில் 2012இல் 2.3 மில்லியன் மக்கள் (21 மில்லியன் சனத்தொகையில் 11 வீதம்) 'முன்னேற்றகரமான' சுகாதார வசதிகள் அற்றவர்களாக உள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியிலும், புத்தாயிரம் வளர்ச்சி இலக்கான (Millennium Development Goal) 2015 இற்குள் 84.5 வீதத்தினருக்கு சுகாதார சௌக்கிய வசதிகள் வழங்குவது என்ற இலக்கை இலங்கை ஏற்கெனவே அடைந்துவிட்டது.

அத்துடன் கடந்த 5 ஆண்டுகளில் சுத்தமான குடிநீர் பெறுபவர்களின் வீதத்தை 78 இலிருந்து 84.1 வீதமாகவும், சுகாதார வசதிகளை 84இலிருந்து 89 வீதமாகவும் அதிகரித்துள்ளது. *

# தோழர் மு.கார்த்திகேசன் சொன்ன ஒரு கருத்து!

இந்தச் சந்தர்ப்பத்தில் கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் ஒருமுறை வழமையான அவரது நகைச்சுவைப் பாணியில் கூறிய ஒரு கருத்தை இங்கு தெரிவிப்பது சுவாரசியமாகவும், அர்த்தபுஸ்டியாகவும் இருக்கும்.

கார்த்திகேசன் அவர்கள் யாழ் இந்துபரிபாலனசபை நடாத்திய பாடசாலைகளில் ஒன்றான மிகவும் பிரபலமான கல்லூரியான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சுமார் 30 வருட காலம் ஆசிரியராகவும், பின்னர் சிறிது காலம் பதில் அதிபராகவும் கடமையாற்றியவர்.

அவர் பதில் அதிபராகப் பதவி நியமனம் பெற்றதும் முதல் செய்த வேலை, யாழ் இந்துக்கல்லூரியில் மேலதிகமாக சில மலசலகூடங்களைக் கட்டுவித்ததுதான். இதுபற்றி அங்கு கல்வி கற்பித்த ஆசிரியர்கள் சிலர் அவரிடம் வினவியிருக்கின்றனர். அவர்களது கேள்விக்கு அவர் அளித்த பதில் இதுதான்:

'இந்து மதம் எப்பொழுதும் மனிதனானவன் தனது மனிதிலுள்ள ஆணவ மலத்தை அகற்றிக்கொண்டே இருக்க வேண்டும் என வலியுறுத்திக் கூறுகின்றது. அது ஒரு முக்கியமான நல்ல விடயம்தான். ஆனால் அதையும் விட மனிதனுக்கு ஒரு முக்கியமான விடயம் இருக்கின்றது. அதாவது முதலில் அவன் ஆணவ மலத்தை அகற்றுவதற்கு முன்னர், அவனது உடலில் இயற்கையாக உருவாகும் அழுக்கு மலசலத்தை அகற்றுவதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். அதனால்தான் இங்கு மலசலகூடத்துக்குப் பற்றாக்குறை இருப்பதைக் கவனத்தில் கொண்டு, அவற்றைக் கட்டுவதற்கு முன்னுரிமை கொடுத்தேன்'.

கார்த்திகேசன் நகைச்சுவையுடன், அதேநேரத்தில் ஆழமான கருத்துடனும் சொன்ன இந்தக் கருத்தை, கார்த்திகேசனுக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தில் உரையாற்றிய, அங்கு நீண்டகாலம் ஆசிரியராகக் கடமையாற்றியவரும், எழுத்தாளருமான 'தேவன் – யாழ்ப்பாணம்' அவர்கள் கூறி பலரதும் பலத்த கைதட்டுதல்களைப் பெற்றுக் கொண்டார்.

*தகவல்: எஸ்.தனபாலசிங்கம்*